உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவநீதி
# SAIVANEETHI



மலர் 07 | சுபானு - வைகாசி | MAY - JUNE 2003 | இதழ் 02



ரூபா 25/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவரிமாற்றம்

**No. 30, Ramya Road,**
**Colombo-04.**

சைவநீதி முகவரி மாற்றப்பட்டுள்ளது. இனி மேல் தாங்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாக ஆசிரியர்

# பொருளடக்கம்

பக்


1. அன்பு ............ 01
2. அகத்தியர் தேவாரத் திரட்டு பதிகவரலாறுகள் ............ 02
3. திருநாவுக்கரசர் அருளிய திரு அதிகை வீரட்டானப்பதிகம் ............ 03
4. கொள்கை தவறாப் புலவர் ............ 06
5. பதினெண் சித்தர்கள் திருமூலர் ............ 07
6. வைரவக் கடவுள் ............ 08
7. கந்தர் அநுபூதி ............ 09
8. விவேக சிந்தாமணியிலிருந்து ............ 11
9. நம்பியாண்டார் நம்பி ............ 12
10. அறஞ்செய்ய விரும்பு ............ 15
11. சிவப்பிரகாசம் ............ 16
12. செல்வம் ............ 19
13. சரம் ஒரு மென் மதுரப்பதம் ............ 21
14. ஞானசம்பந்தர் வடமொழியையும் தென்தமிழையும் சமமாக நேசித்தார் ............ 24
15. சைவ புராணம் தமிழ் விளக்கம் ............ 26
16. நினைவிற் கொள்வதற்கு


சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். -இதழ் நிர்வாகிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

SAIVANEETHY

# சைவநீதி

மலர் : 2 : [illegible] : [illegible] : [illegible] இதழ் : 09

தொடக்குநர்
கலாபூஷணம், ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி, வித்துவான்,
திரு. வ. செல்லையா

புரவலர்கள்:
சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்

திரு. D. M. சுவாமிநாதன்
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

திரு. அ. கந்தசாமி
Chairman H.P.S.

திரு. த. மகாலிங்கம்

பதிப்பாசிரியர்:
திரு. வே. திருநீலகண்டன்
லக்ஷ்மி அச்சகம்

விநியோகம்:
திரு. க. சிவானந்தம்
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

நிர்வாக ஆசிரியர்:
திரு. வே. நவநீதகுமார
30, [illegible] ரோட், கொழும்பு-04.

தொடர்புக்கு 7.30 p.m. to 7.30 a.m.

தொலைபேசி 580458

## 'அன்பு'

மிக உயர்ந்த செயல் அன்பு செலுத்துதல். எல்லா ஜீவராசிகளிடத்தும் அன்புடையவனாய் இருத்தல் வேண்டும். அன்பு இல்லாதவர் எல்லாவற்றையும் தனக்கு உரியதாக்கிப் பயன்படுத்துவார். அன்புடையவர் தன் உடலையும் பிறருக்காக்குவார்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு என்பார் வள்ளுவர்

உண்மை அன்பு, போலி அன்பு என இருவகை உண்டு. ஒருவன் பறவையை வளர்க்கிறான். அதற்கு வேண்டிய உணவு கொடுக்கிறான். அன்பினாலா? இல்லை பறவை மீது உள்ள ஆசையினால். அன்புடையவனாய் இருந்தால் பறவையைக் கூட்டில் அடைத்து வைப்பானா? சுதந்திரமாகத் திரியும் பறவை முதலான உயிர்களை அடைத்து வைத்திருத்தல் கொடும்பாவம்.

தன்னலம் கருதாத அன்பு உண்மை அன்பாகும். இந்த அன்பினால் உண்டாகும் செயல் யாவும் நன்மையுடையதாகும். தாய் பிள்ளை மீது வைக்கும் அன்பும் தன்னலம் கருதாத அன்பேயாகும்.

பிறருக்குத் துயரம் அல்லது துன்பம் வந்தபோது தங்களால் இயன்ற உதவி செய்தல் வேண்டும். அன்பு ஒருவனை நல்ல செயல்களைச் செய்யத் தூண்டும். அன்புடைய ஒருவனிடம் பொறாமை, வஞ்சகம் இருக்காது. பிறர் குற்றங்களை ஆராய்ந்து திரியமாட்டான். உயிர்களிடம் அன்பு இருந்தால் உயிர்களை வருத்திக் கொன்று அதன் மாமிசத்தை உண்ணமாட்டான். அன்பு இல்லாது கொடுக்கும் சுவையுள்ள உணவை விட அன்புடன் உப்பில்லாக் கூழ் கொடுத்தாலும் அது அமிர்தம் போல் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சென்ற இதழின் தொடர்ச்சி............*

# அகத்தியர் தேவாரத்திரட்டு
# பதிக வரலாறுகள்

13. திருஞானசம்பந்த சுவாமிகள் திருநீலநக்க நாயனார் முதலிய அடியார்களோடு திருக்கடவூர் மயானத் திருக்கோயிலுக்குச் சென்று இறைவனைத் தரிசித்தபோது பாடியது.

14. சிதம்பரத்தில் எழுந்தருளிய நடராஜப் பெருமானைத் தரிசித்தபோது திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியது.

15. இறைவனின் திருக்காட்சி பலவற்றையும் பாராட்டிப் போற்றித் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியது.

16. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கடவூர் மயானத்தை அடைந்து வழிபட்டுப் பணிந்து பாடியது.

17. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் இத்தலத்துக்கு எழுந்தருளிய போது இறைவனைத் தரிசித்துப் பாடியது.

18. திருநாவுக்கரசு சுவாமிகள் இறைவன் திருவடிகளின் தன்மைகளைப் பற்றித் துதித்துப் பாடியது.

19. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புன்கூருக்குப் போய் இறைவனைத் தரிசித்தபோது பாடியது.

20. சீகாழியின் (பூந்தராய்) பெருமை முதலியவற்றைப் புகழ்ந்து பாடியது.

21. திருநாவுக்கரசு சுவாமிகள் கயிலாய தரிசனம் செய்யச் சிரமத்தோடு செல்லுங்கால் இறைவன் முனிவர் வடிவம்கொண்டு வந்து திருநாவுக்கரசு சுவாமிகளின் உறுதியினை அறிந்து பின் மறைந்த போது நலம் பெற்று எழுந்து இறைவனைப் பாடியது.

22. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கழுக்குன்றத்து ஆலயத்தை அடைந்து வழிபட்டுப் பாடியது.

23. திருஞானசம்பந்த சுவாமிகள் சமணர்களை வெல்ல மதுரைக்குச் சென்றார். அப்பொழுது திருநாவுக்கரசர் "சமணர் மிகக் கொடியர்; இப்போது கோள் நிலையும் தீதாய் உள்ளது" என்று தடுத்தார். அதற்கு திருஞானசம்பந்தர் சிவனடியார்களுக்கு நாளும், கோளும் எந்நாளும் நல்லவை என்று கூறிப் பாடியது.

24. திருநாவுக்கரசர் திருவாரூருக்குப் போயிருந்தபோது அங்குள்ள திருத்தொண்டர்களைத் தொழுது தொண்டர்க்குத் தொண்டராகும் புண்ணியம் பெற்றேன் என்று மகிழ்ந்து பாடியது.

25. சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரில் திருத்தொண்டர்களைப் பற்றி பாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தியர் தேவாரத்திரட்டு

## 2. திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

பண்-கொல்லி

### திருவதிகை வீரட்டானம்

### நான்காம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 01

நெஞ்சம்முமக் கேயிட மாகவைத்தேன்
நினையா தொருபோதும் இருந்தறியேன்
வஞ்சம்மிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீ ரதிகைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 02

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர்
பெற்றமேற்றுகந் தீர்சுற்றும் வெண்டலைகொண்
டணிந்தீரடி கேளதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 03

முன்னம்அடி யேனறி யாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடி யேனுமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவதுதான்
அன்னநடை யாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 04

காத்தாள்பவர் காவலிகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொ ளென்றுசொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்புன லாரதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 05

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 06

உயர்ந்தேன்மனை வாழ்க்கையு மொண்பொருளும்
ஒருவர்தலை காவ லிலாமையினால்
வயந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றி னகம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 07

வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்று மிலாமையினால்
சலித்தாலொரு வர்துணை யாருமில்லைச்
சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்
கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கிமலக் கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 08

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொன்போல மிளிர்வதோர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும்பிறையீர்
துன்பேகவ லைப்பிணி யென்றிவற்றை
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
என்போலிக ளும்மையி னித்தெளியார்
அடியார் படுவ திதுவே யாகில்
அன்பேயமை யும்மதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 09

போர்த்தாயங்கோ ரானையின் ஈருரிதோல்
புறங்காடரங் காநட மாடவல்லாய்
ஆர்த்தானரக் கன்றனை மால்வரைக்கீழ்
அடர்த்திட் டருள்செய்த வதுகருதாய்
வேர்த்தும்புரண் டும்விழுந் தும்மெழுந்தால்
என்வேதனை யானவி லக்கியிடாய்
ஆர்த்தார்புனல் சூழதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 10

திருச்சிற்றம்பலம்

---

01. கெடில நதிக்கரையில் அமைந்துள்ள திருவீரட்டத்துறையும் எம் தந்தையே! சூலை நோயானது கூற்றுவனாகி வருத்துகின்றது. வெளியிலே தோன்றாமல் என் வயிற்றிலே நின்று குடலை முறுக்கி வேதனை செய்கின்றது. இந்த வேதனையை என்னால் தாங்க முடியவில்லை. நீரும் இதை நீக்குகின்றீரில்லை. இதற்கு ஏதுவாயமைந்த (நான்) முன் செய்தனவாகிய பல கொடுமையை (எனை) என்னவென்று அறிய மாட்டேன். நின் பாதங்கட்கு அடியவனாக (என்னை) ஏற்றுக் கொண்டீர். நின்னடிகளையே இராப்பகலாகப் பிரியாமல் எந்நேரமும் வணங்கி வருகின்றேன்

02. கெடில நதிக்கரையில் அமைந்துள்ள திருவீரட்டத்துறையும் எம் தந்தையே! எனது நெஞ்சத்தை நின்னுடைய இடமாகவே வைத்து விட்டேன் உன்னை நினையாமல் நான் ஒருபோதும் இருந்ததில்லை. அப்படியிருக்க இந்நோய் எனக்கு வரலாமா? இது போன்ற கொடிய வஞ்சகத்தனமான நோயைக் கண்டறியேன் நஞ்சாக வந்து என்னை வருத்துகின்றது. அது என்னை வருத்தாமல் அருளுகின்றீரும் இல்லை. சூலை என் வயிற்றைக் குடைகின்றது. பயப்படாதே என்றும் சொல்கின்றீரிலை.

03. கெடில நதிக்கரையில் அமைந்துள்ள திருவீரட்டத்துறையும் எம் தந்தையே! நினது பாதங்களைப் பணிபவரது பாவங்களைப் போக்கும் ஆற்றலுள்ளவர் நீர். வெண்மையான மண்டையோட்டில் பிச்சைபெற்றுத் திரிகின்றவர் நீர்! இறந்தாரது சாம்பலைத் திருமேனியிற் பூசியிருக்கிறீர்! எருதை வாகனமாகக் கொண்டுள்ளீர். வெள்ளிய தலையோட்டினை மாலையாகவும் கொண்டீர்! இவ்வளவு பெருமை வாய்ந்த ஈசனே! துணிவுடன் உமக்கு ஆளாகி வாழத் தொடங்கினால் என்னைச் சூலைநோய் படுத்துகின்றது. அதை நீக்காமலுள்ளீரே! சூலையை நீக்குவீராக.

04. அன்ன நடைப் பெண்கள் வாழ்கின்ற திருவதிகைக் கெடில நதிக்கரையில் அமைந்துள்ள திருவீரட்டத்துறையும் எம் தந்தையே! அடியேன் எனது முன்னைய அறியாமையால் சூலை நோய் வந்து என்னை வருத்துகின்றது. சிறியேன் உமக்கு ஆளாகியும் விட்டேன். இந்நோயை நீக்கியருள்வீர். ஆளானவனுக்கு உற்ற வினையை நீக்குவதல்லவா ஆண்டாற்குரிய தலையாய கடன்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. (அன்பர்) ஆரவாரத்தோடு ஓடுகின்ற நீருடைய அதிகைக் கெடில நதிக்கரையில் அமைந்துள்ள திருவீரட்டத்துறையும் எம் தந்தையே! காத்து ஆள்பவராகிய நினது காவலை இழந்தேன். நீங்கி அகன்றேன். அதனால் நீயே! (பட்டு) அறிந்து கொள்வாய் என என்னை விட்டு விலகிக் கொண்டாய் நீ வைத்தலில்லாத குளத்தில் விழுந்து விட்டேன். அதிலிருந்து மீண்டு கரையேறும் வழியையேனும் துறையையேனும் அறிகின்றேனல்லேன். இது போன்றதொரு மொழியை - பேசாத பேச்சு - நான் வேறெங்கும் கேட்டேனல்லேன். சூலையோ வயிற்றைக் குடைகின்றது.

06. அதிகை கெடில நதிக்கரையில் அமைந்துள்ள திருவீரட்டத்துறையும் எம் தந்தையே! நீராலும் பூவாலும், தூபத்தாலும் நின்னைப் பூசித்து வணங்குவதை ஒருகாலும் மறந்தேனல்லேன். நன்மை வந்துற்ற காலத்தும் தீமைவந்துள்ள காலத்தும். உன்னை ஒருபோதும் மறந்தேனல்லேன். இறந்தவர்கள் தம் தலையோட்டில் பிச்சையேற்றுத் திரிபவரே! என்னுடைய வயிற்றில் உற்றுக் குடைந்து கொண்டிருக்கும் சூலையை நீக்கியருள்வீராக அடியேன் மிக வருந்துகின்றேன்.

07. அதிகைக் கெடில நதிக்கரையில் அமைந்துள்ள திருவீரட்டத்துறையும் எம் தந்தையே! சிறந்த காவலாக எமக்கு ஒருவரும் அமையாத படியால், உயர்ந்த பொருளும், இல் வாழ்க்கையும் பெரிதென்றே கருதியிருந்தேன். உண்மையறிந்து உமக்கேயாளாகினேன். அப்படி வாழலுற்றும், வலிந்து வருத்துகின்ற சூலையைத் தீர்த்தருள்வீர். அது என் வயிற்றினுள்ளே பற்றி இழுத்துப் புரட்டிக் குடைந்து புரளச் செய்து அறுக்கின்றது. இவ் வேதனை தாங்காது அயர்கின்றேன்.

08. கெடில நதிக்கரையில் அமைந்துள்ள திருவீரட்டத்துறையும் எம் தந்தையே! வஞ்சகம் பொருந்திய மனம் ஒரு சிறிதும் இல்லாத படியால் மனை மகிழ்வுற்று நினைத்திருந்தேன். இதற்கு சலிப்புற்றால் துணையாய் எவருமில்லை. வெண்ணிறம் பொருந்திய சங்காலான குண்டலக் காதையுடைய எம் பெருமானே! சூலை என் வயிற்றினுள்ளே குடைந்து கலக்கி என்னைத் தின்னுகின்றது. நான் அலுத்துவிட்டேன்.

09. கெடில நதிக்கரையில் அமைந்துள்ள திருவீரட்டத்துறையும் எம் தந்தையே! பொன்போல் ஒளிரும் மேனியை உடையீர்! மெலிந்த பிறைப்பிள்ளையுடையீர் துன்பம், கவலை, பிணி ஆகிய இவை நம்மை அணுகாமல் செய்தீருமில்லை. உன்னடியார்கள் இத்தகைய துன்பத்தையே யடைவார்களாயின், என் போன்ற பேயர்கள் இவ்வுண்மை முழுமுதற் கடவுளாகத் தெளிந்து கொள்ளார்கள். (நாயேன்) நின்பால் அன்பொன்றையே உள்ளவனாவேன்.

10. அலைமோதியெறிந்து ஆரவாரிக்கும் நீர் பொருந்திய அதிகைக் கெடில நதிக்கரையில் அமைந்துள்ள திருவீரட்டத்துறையும் எம் தந்தையே! யானையின் உரித்தெடுக்கப் பெற்ற தோலைப் போர்த்தருளியவரே! சுடுகாட்டை அரங்கமாகக் கொண்டு ஆடவல்லவரே! ஆரவாரித்து வந்த இராவணனாகிய அரக்கனைக் கைலை மலையிடை நசித்துப் பின்பு அவனுக்கு அருள் செய்த அதனை இப்போது நினைக்கின்றிரில்லை! என் வேதனையான அவற்றை நீக்காமலுள்ளீர் என்னே!

Let a man learn thoroughly whatever he may learn, and let his conduct be worthy of his learning. 391

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்கை தவறாப் புனிதர்

சைவப்புலவர்மணி
வ. செல்லையா

சோழ மண்டலத்திலே கணமங்கலம் என்னும் ஓர் ஊர் உண்டு. அங்கு வேளாளர் குலத்திலே தாயனார் என்னும் பண்பாளர் தோன்றினார். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினார். சிவபக்தி, அடியார் பக்தியுடையவர். அவருக்குப் பெற்றோர் உரிய வயதில் விவாகமுஞ் செய்து வைத்தனர். மிகுந்த செல்வமுடையவராக உள்ள அவர் நல் மனையாளுடன் இணைந்து இல்லற அறுமத்திலும் நெறி தவறாது வாழ்ந்து வந்தார்.

தாயனார் பரமசிவனுக்குச் செந்நெலரிசியுஞ் செங்கீரையும் மாவடுவுந் தினந்தோறும் கொண்டு சென்று திருவமுது செய்வித்து வந்தார். இந்தக் கொள்கையிற் சிறிதும் தவறாது நடந்து வரும் காலத்திலே கடவுளின் திருவருளினால் அவருக்கு வறுமையுண்டாயிற்று. ஆண்டவன் சோதனை அதுவாயிற்று என்று நினைத்து உருகுவாரேயோ தவிர, அடியார்கள் குறிக்கோளைக் கைவிட மாட்டார்கள். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் இறைவனை "மிக்குச் சோதிக்க வேண்டாம்" என்று வேண்டியிருக்கிறார். சோதனை வேண்டும். ஆனால் அது கூடவிடக் கூடாது என்பது அவரின் வேண்டுகோள். தாயனார் வறுமையடைந்ததும், கூலிக்கு நெல் அறுக்கும் தொழிலை மேற்கொண்டார். அவர் கூலிக்கு நெல்லைப் பெற்றுச் செந்நெல்லாம் இறைவனுக்கு அமுதுக்குக் கொடுப்பார். கார் நெல்லைக் கொண்டு தாஞ் சீவனஞ் செய்து வந்தார். இங்ஙனம் நடந்து வரும் காலத்திலே, பரமசிவன் அவ்வூரில் உள்ள வயல்களில் விளையும் நெல்லையெல்லாம் செந்நெலாகும்படி அருள் செய்தார். சோதனையும் சிறிது சிறிதாகப் பெரிதாயிற்று. இதனால் தாயனார் பெருகும் மகிழ்ந்து தினந்தோறும் வயல்களுக்குப் போய் நெல்லறுத்துக் கூலி வாங்கி "இப்படி வினை தந்தது அடியேன் செய்த புண்ணியத்தால்" என்று கூறிச் சுவாமிக்குத் திருவமுது செய்விப்பாராயினார்.

செந்நெல்லே கூலியாகப் பெறுவதால் அது இறைவனுக்கு அமுதுக்குப் பயன்படுகிறது என்று இல்லாளாகிய நல்லாள் கருதித் தாயனாருக்கு வேண்டிய உணவினைத் தினமும் இலைக்கறி சமைத்து வைப்பார். அதனைக் அவர் உண்டு தாம் செய்து வரும் திருப்பணியைச் சிறிதும் தவறாது செய்து வருவாராயினார். மனையாருக்கு வேலை தினமும் வீட்டின் பின்புறத்தி லுள்ள தோட்டத்துக்குச் சென்று அங்குள்ள இலைக்கறி வகைகளைக் கொய்து சமைத்து வைப்பது. தாயனார் அதனை உண்டு தினமும் நெல்லறுக்கச் சென்று கூலி பெற்று இறைவனுக்கு அமுது செய்வித்து வருவார். இங்ஙனம் செய்து வருங்காலத்து தோட்டத்து இலைக்கறி வகைகளும் அற்றுப் போய்விட்டன. இதனால் அடுப்பில் நெருப்பு மூட்டாதொழிய அகாரம் நீரை அருந்த சிறந்த மனைவியார் தண்ணீர் வார்க்க அதனைத் தாயனார் பானம் பண்ணித் திருப்பணியை முட்டின்றி நிறைவேற்றி வந்தார்.

இங்ஙனம் நடக்கும்போது ஒருநாள், சுவாமிக்குத் திருவமுது செய்விக்கும் பொருட்டுச் செந்நெல்லரிசியும் செங்கீரையும் மாவடுவுங் கூடையில் வைத்துச் சுமந்து கொண்டு தாயனார் முன் சென்றார். மனைவியார் பஞ்சகவ்வியங் கொண்டு அவருக்குப் பின்னாக நடந்தார். தாயனார் வறுமையினால் உடல் மெலிந்து தளர்ந்திருந்தார். பசி மேலும் அவரை வாட்டி நின்றது. இந்நிலையில் கால்கள் தள்ளாடத் தவறி அவர் நிலத்தில் விழப் பஞ்சகவ்வியத்தை முடியிருந்த கையினால் மனைவியார் அவரை அணைத்தார். அணைத்ததும் யாவும் நிலத்திற் சிந்திப் போகக்கண்ட தாயனார், "இனித் திருக்கோயிலுக்குப் போவதினாற் பயன் யாது?" என்று துக்கித்துப் பெருங் கவலையடைந்

[illegible]
[illegible] 397
[illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். "இங்கே சிந்திய நெல்லரிசியையும், செங்கீரையும், மாவடுவையுங் கடவுள் திருவமுது செய்யும் பேற்றைப் பெற்றிலேன்" என்று நினைத்தார். கொள்கை தவறாப் புனிதர் அதலின் அவர் அரிவாளினாற் தங் கழுத்தை அரியத் தொடங்கினார். அப்பொழுது அவ்வடியார் தம்முடைய கழுத்தை அரிகின்ற கையைத் தடுத்தற்காகச் சிரசித்துப் பிரபஞ்ச மெங்கும் வியாபித்திருக்கின்ற சிவபெருமான் திருக்கரத்தை உயர நீட்டி அதனைத் தடுத்தருளினார். பரமசிவனுடைய திருக்கரம் தாயனாரின் அரிவாள் பிடித்த கையைப் பிடித்துத் தடுத்ததும் அவர் பயங் கொண்டு ஒதுங்கிப் பின் தெளிந்து முன்னைய துன்பம் நீங்கி மனம் மகிழ்ந்தார். எம்பெருமான் தமக்குச் செய்தருளிய திருவருளை நினைந்து நினைந்து பின் வீழ்ந்து அஞ்சலி செய்து ஸ்தோத்திரம் பண்ணிக் கொண்டு நின்றார்.

சிவபெருமான் இடபாரூடராகத் தோன்றி, "நீ நம் மேல் வைத்த அன்பினாலே செய்த செய்கை நன்றாயிருக்கின்றது; நீ உன் மனைவியோடு வந்து நமது சிவலோகத்தில் வாழ்ந்திரு" என்று திருவாய் மலர்ந்தருளினார். அவர்கள் உடன் செல்ல, எம் பெருமான் போயருளினார். அந்தத் தாயனார் என்பவர் "இங்கே சிந்தியவைகளைப் பரமசிவன் திருவமுது செய்யப் பெற்றேனில்லையே" என்று துக்கித்து அரிவாளினால் தமது கழுத்தை அரிதலுற்ற படியால் அவருடைய பெயர் அரிவாட்டாய நாயனார் ஆயிற்று. அரிவாள் + தாயனார் = அரிவாட்டாய நாயனார்.


*"முன்னிலை கமரேயாக முதல்வனார் அமுது செய்யச் செந்நெலின் அரிசி சிந்தச் செவியுற வடுவின் ஓசை அந்நிலை கேட்ட தொண்டர் அடியினைத் தொழுது வாழ்த்தி மன்னும் ஆயனார் செய்கை அறிந்தவா வழுத்துகின்றேன்"*

(திருத்தொண்டர் புராணம்)

---

## பதினெண் சித்தர்கள்

**(14) திருமூலர்** (திருவாவடுதுறை)



**வேளாளர்** மரபினைச் சேர்ந்த இவர் சாலோகப் பதவியை அடைந்து "பங்குகன்னர்" என்ற சித்தர் ஒருவரின் உள்ளக் கோட்பாட்டின்படி இமயமலையில் புலஸ்தியரை சந்திக்க அனுப்பப்பட்டவராவார். இவர் "அகத்தியரைக் காணவேண்டும், அவருடன் அளவளாவ வேண்டும்" என்று விருப்பம் கொண்டு அவரைக் காணவரும் வழியில் சிதம்பரத்திற்கு அண்மையில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இடையன் இறந்து விட்டதைக் கண்ணுற்ற அவனது பசுக்கூட்டங்கள் வருந்தி ஓலமிட்டு அலறின. இதையும் கண்ணுற்றுப் பொறுக்க முடியாத திருமூலர் மனமிரங்கித் தனது ஆவியை அவ் இடையனுடலுட் செலுத்தி மாடுகளை அவைகளது இல்லங்களில் சென்று சேர்ப்பித்தார். அவ் இடையனின் உடலி

**Dr. எஸ். லோகநாதன்** (M.S. MS (India) LP)
மருதம் கிளினிக், நாவாந்துறை, மன்னார்.

லிருந்து மீண்டும் வெளி வராதபடி அவர் உடல் மறைக்கப்பட்டது. என்னே திருமூலர் மகானின் கருணை! இச்சம்பவத்தின் பின்னர் தமது பயணத்தைத் தொடர்ந்து அகத்தியரைக் கண்டு சிலகாலம் பொதிகை மலையில் உள்ள அவரது ஆசிரமத்தில் தங்கி, அங்கிருந்து மீண்டும் தில்லைக்கு வந்தார். தில்லைக் கூத்தப்பெருமான் ஆலயத்தில் யோக சமாதியில் ஆழ்ந்திருந்து ஆண்டுக்கொரு முறை நிஷ்டையிலிருந்து நீங்கி ஓர் பாடலாக மந்திரமாக இயற்றியருளினார். இவர் 3000 திருமந்திரங்களை இவ்வண்ணமே இயற்றினார். இவர் இவ்வேளை நிஷ்டையான சமாதியடைந்தார். இவர் இயற்றிய திருமந்திரம், திருமூலர் வாதம் 21, திருமூலர் 608, திருமூலர் வழலைச் சூத்திரம் 300, திருமூலர் வைத்தியம், திருமூலர் ஞானம், திருமூலர் பல திரட்டு என்பவை சித்த மருத்துவத்தின் தலைசிறந்த சுவடியற்ற நூல்களாகும்.

**Letters and the numbers are the two eyes of man. 392.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவக் கடவுள்

சிவஸ்ரீ. க. குமாரசாமிக் குருக்கள்

முன்னொரு காலத்தில் திருமாலும் பிரமாவும் மகாமேருமலையின் ஒரு கொடுமுடியில் இருந்தார்கள். அப்பொழுது முனிவர்களும் தேவர்களும் வந்து வணங்கி, "முழுமுதற் கடவுள் யார் என்பதை அடியேங்களுக்கு உபதேசித்தருளுக" என்றார்கள். பிரமா "நானே பரம்பொருள்" என்றார். விட்டுணுவும் "நானே பரம்பொருள்" என்று கூறினார். இருவரும் இத்தன்மையாகத் தர்க்கம் செய்ய முனிவர்களும் தேவர்களும் இது நம்மால் வந்தது என்று கூறி, ஒருவரும் நில்லாது நீங்கினர். பிரம விட்டுணுக்கள் பின்பும் வாதஞ் செய்தார்கள். வேதமும் ஆகமமும் வேறு வேறு உருவங்களைத் தாங்கி "வாதஞ் செய்யற்க. சிவபெருமான் ஒருவரே மெய்க்கடவுள்" என்று கூறின. அவர்கள் பின்னும் போரைச் செய்தார்கள். பெருங்கருணைக் கடலாகிய சிவபெருமான் அதைக் கண்டு அவர்களுடைய போரைத் தொலைக்கத் திருவுள்ளம் கொண்டு, அளவில்லாத சோதி வடிவாய் ஆகாசத்தின் மேல் தோன்றியருளினார். அதனைக் கண்ட பிரம விட்டுணுக்கள் அச்சோதியை சிவனென அறியாதவர்களாயினர். அதனைப் பரமசிவன் அறிந்து உமாதேவி சமேதராய் அச்சோதியின் இடையே தோன்றியருளினார். விட்டுணு விரைந்தெழுந்து வணங்கினார். மமதை சிறிதும் நீங்காத பிரமா தமது உச்சிச் சிரசிலுள்ள வாயினாலே சிவபெருமானை இகழ்ந்தனர்.

சிவபெருமான் பிரமாவுடைய மமதையைத் தொலைக்கவும் மற்றைத் தேவர் முதலாயினோர் தம் அகங்காரத்தை நீக்கவும் வைரவக் கடவுளைத் தமது இதயத்திலிருந்து உண்டாக்கினார். அவர் நீலநிறத் திருமேனியும், சூலம், பாசம், உடுக்கு ஏந்திய நான்கு திருக்கரங்களும், திரிநேத்திரங்களும், திருச்சடைமுடியுமுடைய உக்கிர வடிவு கொண்டு தோன்றினார். வைரவக் கடவுளைச் சிவபெருமான் நோக்கி, "நம்மை இகழ்ந்த பிரமனுடைய உச்சிச் சிரசைக் கிள்ளி கையிலேந்தி, மற்றைத் தேவர்கள் முனிவர்களது இரத்தத்தைப் பிச்சையாக ஏந்தி, அப்பொழுது இறப்பவர்களுக்கு மீட்டு உயிரைக் கொடுத்தி" என்று கூறிச் சோதியில் மறைந்தருளினார்.

சோதியும் மறைந்தது. விட்டுணு சிவனை வணங்கி வைகுண்டமடைந்தார். வைரவக்கடவுள் பிரமாவினது உச்சிச் சிரசை நகத்தால் கிள்ளித் தமது திருக்கரத்திலேந்தி அவருக்கு உயிர் கொடுத்தருளினார். பிரமா எழுந்து, நல்லறிவு வரப்பெற்று, வைரவக் கடவுளைப் பன்முறையும் அன்போடு வணங்கி, "சர்வசங்கார காரணராகிய கடவுளே! அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளுக. சிறுமையும் எளிமையும் உடைய இந்தச் சிரசம் பரிசுத்தமுடையதாயிற்று. அடியேன் தேவரீரைத் தரிசிக்கும் பொழுது மயக்கம் தீரும்படியும் ஆணவமலம் மாய்ந்திடும்படியும் இச்சிரசையும் திருக்கரத்திலேந்தியருளுக" என்று சொல்லித் துதித்தார். வைரவப் பெருமான் "அவ்வாறே யாகுக" என்று கிருபை செய்து மேருமலையை நீங்கிச் சென்று தேவர்களதும் முனிவர்களதும் குருதியைப் பிச்சையாக ஏற்று, அவர்களுக்கு உயிர் கொடுத்து எழுப்பியருளினார்.

வைரவக்கடவுள் பின்னர் வைகுண்டமடைந்து, விட்டுணுவினுடைய இரத்தத்தைப் பிச்சையாய் ஏற்று, அவர் மீள உய்ந்தெழும்படி அருள்செய்து, அண்டங்களைப் பரிபாலித்து வீற்றிருந்தருளினார்.

சுந்தரமூர்த்தி நாயனார்

ஏன்று வந்தவன் றலையினை யறுத்து
நிறைக்க மாலுதி ரத்தினை யேற்றுத்
தோன்று தோன்மிசைக் களேபரந் தன்னைச்
சுமந்த மாவிர தத்தகங் காளன்
சான்று காட்டுதற் கரியவ னெளியவன்
றன்னைத் தன்னலா மனத் தார்க்கு
மான்று சென்றணை யாதவன் றன்னை
வலிவலந் தன்னில் வந்து கண் டேனே.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் அநுபூதி

திருமுக கிருபானந்த வாரியார்

உலகம் உய்ய அவதரித்தவர் அருணகிரிநாதர். அவர் முருகப் பெருமான் ஒருவரையே பாடும் நியமம் பூண்டவர். "கற்றாரு சிந்தைப் பாதர் கழலையன்றி வேறொருவர் இப்புறத்தவரை நாடார்" என்பது சுவாமிகளை சிறுவாக்கு. அப்பரம பதி விரதா தருமத்தின்படி நின்ற அருணகிரிநாதர், நாம் உய்யும் பொருட்டுத் திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, வேல்மயில் விருத்தங்கள் என்ற ஞான அருள் நூல்களைப் பாடி நமக்கு வழங்கியருளினார். அவற்றுள் கந்தர் அநுபூதி மந்திர நூல் சுருங்கியதும் மகத்துவ மிகுந்ததும் ஆகும். நமது உடம்பில் ஆறு ஆதாரங்கள் உண்டு. அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை. இந்த ஆறு ஆதாரங்களில் மலர்ந்துள்ள மலர் இதழ்களில், அகர முதல் க்ஷகரம் முடிவாக ஐம்பத்தொரு அட்சரங்கள் உள.

மூலாதாரத்தில் 4, சுவாதிட்டானத்தில் 6, மணிபூரகத்தில் 10, அநாகதத்தில் 12, விசுத்தியில் 16, ஆக்ஞையில் 2, அதற்கு மேல் 1, ஆக 51. இதை "அகரமுதலென உரை செய் ஐம்பத்தொரு அக்ஷரம்" என்ற திருப்புகழாலும் அறிக. இந்த மாதிரியான மந்திரங்களே அநுபூதியின் ஐம்பத்தொரு பாடல்களாக அமைந்தன. இக்கந்தர் அநுபூதியில், அருணகிரிநாதர் தமது அனுபவத்தை நிரம்பவும் கூறியிருக்கின்றார். மெய்ப்பொருள் என்ற அருமையான திருமொழியை நான்கு இடத்தில் எடுத்துக் கையாண்டிருக்கின்றார்.

*"அமரும் பதிகேள் அகமாம் எனுமிப்*
*பிமரம் கெடமெய்ப் பொருள் பேசியவா"*

8 வது பாடல்

*"கூகா எனஎன் கிளைகூடி அழப்*
*போகா வகைமெய்ப் பொருள் பேசியவா"*

11 வது பாடல்

*"அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்*
*உரிதா உபதேசம் உணர்த்தியவா"*

20 வது பாடல்

*"கரவாகிய கல்வியுளார் கடைசென்*
*றிரவா வகைமெய்ப் பொருள் ஈகுவையே"*

45 வது பாடல்

இனி மனதை விளித்து மூன்று பாடல்களில் அறிவுரை பகர்கின்றார். இவை மூன்றும் மிகவும் இனிமையான உபதேசம். 7, 14, 37 என்னுமுள்ள பாடல்கள். ஏ மனமே! நீ வீணே கெடுகின்றாய். பிழைக்கும் வழி கூறுகின்றேன் கேள். வறியவர்க்கு ஒளியாமல் கொடு. கொடுத்தோம், கொடுத்த உடைமை நம்முடையது என்ற எண்ணம் வரக் கூடாது. உடைமை யாவும் முருகனுடையவை. உடம்பு, கரசரணாதியவை, மனம் முதலிய கருவி கரணங்கள் எல்லாம் அவன் தந்தவை; ஆதலால் ஏழைகட்குத் தரும்போது நான் தந்தேன் என்ற தற்செருக்கு தலைகாட்டாமல், முருகனை நினை. மனமே! உன்னுடைய நீண்ட வேதனைகளை எல்லாம் நம் பரமபிதாவினுடைய வடிவேல் துகளாக்கிவிடும். ஆதலால் அந்நெடிய துன்பங்களைச் சுட்டுவிடு. வினைகள் எல்லாம் விட்டுவிடு.

*கெடுவாய் மனனே கதிகேள் கரவாது*
*இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்*
*சுடுவாய் நெடுவே தனைதூள் படவே*
*விடுவாய் விடுவாய் வினையா வையுமே.*

7 வது பாடல்

The learned are said to have eyes, but the unlearned have (merely) two sores in their face. 393

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ மனமே! உனக்கு உய்யும் வழி தெரியவில்லையே! நான் கூறுகின்றேன். கவனமாகக் கேட்டுக் கொள். ஆசையினால் தான் எல்லாத் துன்பங்களும் விளைகின்றன.

இந்த ஆசை உள் புகுவதற்கு ஐந்து வழிகள் உண்டு. மெய், வாய், கண், நாசி, செவி என்ற இந்தப் பஞ்சேந்திரியங்களின் வழியே ஆசை என்ற கள்வன் உள்ளே புகுந்து ஞான ரத்தினத்தைக் கவர்கின்றான். மனமே! ஐவாய் வழிசெல்லும் அவாவினை ஒழித்து உய்வாய்! ஆசையறுத்தவனை, கையில் ஞானவேலைத் தாங்கிய முருகப்பெருமான் திருவடிக் கமலம் உனக்குக் கிடைக்கும். அதனால் உனக்கு உய்வு உண்டாகும்.

*கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று*
*உய்வாய் மனனே ஒழிவாய் ஒழிவாய்*
*மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்*
*ஐவாய் வழிசெல்லும் அவாவினையே*

41 வது பாடல்

இந்தப் பாடல் பிறவிப் பிணிக்கு அரிய மருந்து.

மற்றொன்று, மனமே! உனக்குச் சினம் மூள்கின்ற போது சற்று அறிவு அறவே அற்றுப் போகும். ஒரு மயக்கநிலை உண்டாகும். சினம் மிகுதியாக வந்தவுடன் சொல்வன இன்ன, செய்வன இன்ன என்று தெரியாத நிலை ஏற்படுகின்றது. ஆதலால் மலையே புரண்டு வந்தாலும், வானந் துளங்கி வீழினும் நிலை கலங்காதே. பொறுமையாக இரு. அப்பொறுமையான பூமியில் ஞானமாகிய மரம் முளைக்கும். அந்த ஞானத் தருவில், அருள் பழுக்கும். இந்த அருள் பழத்தை அழிக்க ஒரு குரங்கு வரும். அதுதான் அகந்தை என்ற குரங்கு. நான் தான் என்ற அகந்தையை, ஞான வாளால் வெட்டி எறி. அங்ஙனம் அடியோடு அகந்தையைத் தொலைத்து விட்டு, மலையைப் பிளந்த வேலாயுதக் கடவுளுக்குத் தொண்டனாக இரு. தொண்டனாக வேண்டும் என்ற ஆர்வம் மேலிட வேண்டும். அந்த விருப்பம் மிகுதியாக எழுதல் வேண்டும்.

*கிரிவாய் விடுவிக்ரம வேலிறையோன்*
*பரிவாரம் எனும் பதம் மேவலையே*
*புரிவாய் மனனே பொறையாம் அறிவால்*
*அரிவாய் அடியோடும் அகந்தையையே.*

37 வது பாடல்

இந்த மூன்று பாடல்களுக்கும் ஒரு அடைமானம் இட்டதுபோல், "வாய்" என்ற சொல்லை அமைத்திருக்கின்றார். 7 கெடுவாய், 14 கைவாய், 37 கிரிவாய்.

இம்மூன்று பாடல்களையும் அருணகிரியார் உள்ளபடியே தன் மனதை நோக்கித் தான் அறிவுரை கூறிப் பாடினார் என்று எண்ணாதீர்கள். உலகில் உள்ள முந்நூறு கோடி மக்களையும் நோக்கிப் பாடியருளினார். ஆ! என்ன அரிய உபதேசம்!

சிந்தித்திருக்கும் மனந்திருந்தி உய்யுமாறு, வள்ளல் அருணகிரிப் பெருமானார் உபதேசித்த அருள் திறத்தை மறக்கலாமா?

மேலும் கந்தரநுபூதியில் பலப்பல உண்மைகளை உரைத்திருக்கின்றார். இது சிந்தனைக்கும் வந்தனைக்கும் உரிய ஒரு நூல். அருணகிரியார் மிகவும் புகழ்ந்தோதிய திருத்தலங்கள் ஆறுபடை வீடுகள். அவருடைய ஆதாரத் தலம் அருணை. அவருக்கு அருள் கிடைத்த இடம் வயலூர். ஜெபமாலை தந்த இடம் பழநி. இத்தகைய அரிய பெரிய தலங்களைப் பற்றிச் சுவாமிகள் இக்கந்தரநுபூதியில் குறிப்பிடவில்லை. திருச்செங்கோடு என்ற ஒரு தலத்தை மட்டுமே "நாகாசல" என்று குறிப்பிட்டுள்ளார்.

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதி திருநாமம் முருகன் என்று மிக அழகாகத் திருப்புகழிலும் கந்தர் அலங்காரத்திலும் திருவகுப்பிலும் பல இடங்களில் கூறியிருக்கின்றார். இந்த இடங்களில் இனிக்க இனிக்க முருகனை குணம் பல பெருமைகளைக் கூறியுள்ளார். மந்திரநாமமாகிய இந்தக் கந்தரனுபூதியில் திருநாமம் முருகன் என்று ஒரு இடத்திலும் குறிப்பிடப் படவில்லை. இது சிந்தனைக்குரிய கருத்து. குருபரனாகிய குகனை குருமூர்த்தமாகக் கொண்டாலன்றி, உண்மைப் பொருளை உணர முடியாது என்று, 13 வது பாடலில் திட்டவட்டமாகத் தெளிவாகத் தெரிவித்து விட்டார்.

"முருகன் தனிவேல் முனிநங் குருவென்று
அருள்கொண்டு அறியார் அறியுந் தரமோ"

அப்படிக் கருணாநிதியைக் குருவாகப் பெற்று விட்டால், எல்லாக் கலைகளையும், எல்லா நிலைகளையும் உள்ளிருந்து உணரலாம். பெரியவர் ஒருவர் நம் வீட்டுக்கு வர வேண்டுமாயின், அழைத்தால் தானே வருவார். அழையாதவர் இடத்துக்கு வர மாட்டார்கள். அது முறை அன்று. "முருகா! என் அப்பனே! நீ எனக்குக் குருவாக வா! வந்து உபதேசம் செய்" என்று நாம் எப்பொழுதாவது உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகி உண்மை யன்புடன் அழைத்திருக்கின்றோமா? அவன் நமக்குக் குருவாக வரவேண்டும் என்ற அருள் தாகமே இன்னும் பலருக்கு வரவில்லை. தாகம் வந்தவனுக்குத் தண்ணீர் தரப்படும். விக்கினோர்க்குத் தண்ணீர் விடப்படும். ஆதலால் இந்தப் பாடலில் கருணை நிறைந்த முருகனைக் குருவாய் வருவாய் என்று அழைப்போமாக. நன்றாக அழைக்கத் தெரியாத நமக்கு, குகனைக் குருவாக அழைக்கும் அரிய பாடலைப் பாடித் தந்து அநுபூதியை அருணகிரியார் முடிக்கின்றார். அந்தப் பாடல் இது:

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

நன்றி
வாரியார் விரிவுரை விருந்து

---

## விவேக சிந்தாமணியிலிருந்து.....

ஆலிலை பூவுங்காயு மளிதரு பழமு முண்டேல்
சாலவே பட்சிஎல்லாந் தன்குடி யென்றே வாழும்
வாலிபர் வந்துதேடி வந்திப்பர் கோடாகோடி
ஆலிலை யாதிபோன வந்தவர் திரும்புவாருண்டோ. 06

ஆல விருட்சத்தினிடம் இலை, பூ, காய் இனிமை தரும் பழம் முதலியவைகளிருந்தால், பிசுதியாகப் பட்சிகளும் தமது குடியிருப்பிடம் போலக் கூடிவாழும். இலை முதலியவை நீங்கி மரம் பட்டு நிற்கில் ஒரு பட்சியும் சேராது. (அதுபோல) மிகுந்த செல்வமிருந்தால் அன்னியமானவர்கள் வந்து கூடி வந்தனம் செய்வார்கள். செல்வமில்லையேல் ஒருவரும் எட்டியும் பார்க்க மாட்டார்கள்.

தண்டாமரையினுடன் பிறந்தே தண்டேயுகரா மண்டூகம்
வண்டோ கானத் திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும்
பண்டே பழகியிருந்தாலு மறியார் புல்லோர் நல்லோரைக்
கண்டே களித்தங்குறவாடித் தம்மிற் கலப்பர் கற்றாரே. 08

தவளையானது தன்னுடன் பிறந்து வளர்ந்திருக்கும் குளிர்ந்த தாமரையிலுள்ள தேனை உண்ணாதிருக்க, காட்டிலிருந்த வண்டுகளோ வந்து அந்த மதுவையுண்டு களிக்கும் (அதுபோல) நெடுநாள் பழகியிருப்பினும் கற்றார் அருமையை அறிவில்லார் அறியார்; கற்றவரே அறிவர்.

*"It is the part of the learned to give joy to those whom they meet, and on leaving, to make them think: "Oh, when shall we meet them again!"*
394

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பியாண்டார் நம்பி

க. அ. இராமசாமிப் புலவர்

திருநீறுதந்த சோழ வளநாட்டிலே, திருநாரையூர் என்னும் ஊரிலே முன்னாளில் ஆதிசைவர் ஒருவர் இருந்தார். அவர் அப்பதியிலெழுந்தருளிய பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசனை புரிபவர். அவருக்கொரு புதல்வர் தோன்றினார். அவர் அவ்வத்தலைத்திற்குரிய பருவங்களெல்லாஞ் செய்யப் பெற்றுக் கல்வி கற்றுக்கொண்டிருந்தார்.

ஒருநாள் அப்புதல்வருடைய தந்தையார் ஓர் ஊருக்குச் செல்ல நேர்ந்தது. அப்பொழுது அவர் தம்முடைய அருமைத் திருமகனைப் பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசை செய்யுமாறு சொல்லி விட்டுச் சென்றார். அப்புதல்வரும் தந்தையாருடைய கட்டளைப்படி பொல்லாப்பிள்ளையாருக்குப் பூசை செய்யத் தொடங்கினார். நீராட்டல் முதலியவை களை யெல்லாம் செய்து முடித்தார்; பின்னர் உணவினை அப்பிள்ளையார் திருமுன்பு வைத்துத், "திருவமுது செய்தருளும்" என்று வேண்டிக் கொண்டார். பொல்லாப் (பொள்ளா)ப் பிள்ளையாரோ பொல்லாப் பிள்ளையாராக இருந்தார்.

தாம் படைத்துள்ள உணவினை அப்பிள்ளை யார் தமது கையினாலேயெடுத்து விழுங்கி விடுவார் என்பது சிறுவராகிய புதல்வருடைய எண்ணம். எவ்வளவோ வேண்டிக் கொண்டும் பிள்ளையார் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. அதனால் அவருக்கு மிகுந்த வருத்தமுண்டாயிற்று. "பிள்ளையாரே நான் தங்களுக்கு ஏதேனுந் தவறு செய்ததுண்டா? அடியேன் படைத்தவைகளை உண்ணாமலிருக்கக் காரணம் யாது? உடனே அமுது செய்யாவிட்டால் நான் என்னுடைய தலையைக் கல்லிலே மோதி உடைத்துக் கொள்வேன்" என்று கூறினார். அப்பொழுதும் பிள்ளையார் அசையாமலிருக்கவே தம்முடைய தலையைக் கல்லிலே அடித்து உடைத்துக் கொள்ளப் புகுந்தார்.

அவ்வளவில் பொல்லாப்பிள்ளையார், "நம்பி பொறு!" என்று தடுத்து அங்கு படைக்கப்பட்டிருந்த வைகளையெல்லாம் தமது துதிக்கையை நீட்டி யெடுத்து உட்கொண்டருளினார். அந்நிகழ்ச்சியைக் கண்ட புதல்வருக்கு மகிழ்ச்சியுண்டாயிற்று. இன்பக் கடலாடினார். பிறகு காலித்தட்டை எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று தாயார் முன் வைத்தார். காலித்தட்டைக் கண்ட அம்மையார், "பிள்ளையாருக்குப் படைக்கப்பட்ட உணவுச் சோறு எங்கே" என்று கேட்டார். நம்பியாண்டார், பிள்ளையார் சாப்பிட்டு விட்டதாகக் கூறினார். அவ்வம்மையார் மகன் கூறியதை நம்பவில்லை. யாருக்கோ கொடுத்து விட்டு மகன் பொய் கூறு வதாக எண்ணினார். சினந்து சுடுமொழிகள் பல கூறி விரட்டினார்.

பள்ளிக்குச்செல்லப் பொழுது கடந்து விட்டது. பொழுதான பிறகு சென்றால் கணக்காயர் கடிந்து ரைத் தண்டிப்பார். ஆகவே, பள்ளிக்குச் செல்ல அஞ்சிய நம்பியாண்டார் தம்மை ஆட்கொண்ட பிள்ளையாரிடமே சென்று கல்வி கற்பிக்குமாறு வேண்டிக் கொண்டார். பிள்ளையாரும் நம்பியாண் டார்க்கு அன்றிரவே கற்பித்தருளினார்.

நம்பியாண்டாருடைய தந்தையார் ஊரிலிருந்து திரும்பி வந்தார். பல வியத்தகு நிகழ்ச்சிகளைத் தம்முடைய மகன் பொல்லாப்பிள்ளையாருடைய திருவருட் பேற்றைப்பெற்றிருப்பதை அறிந்து மகிழ்ந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். நாட்கள் பல சென்றன. கல்வியில் தேர்ச்சி பெற்ற நம்பியாண்டார், பொல்லாப் பிள்ளையார் மீது இரட்டைமணிமாலை பாடியருளினார்.

அக்காலத்திலே, சோழவள நாட்டிலே பிறக்க வீடுபேறு அளிக்குந் திருப்பதியாகிய திருவாரூரிலே, அபய குலசேகர சோழமன்னன், சைவமுந் தமிழுந் தழைத்தினிதோங்கச் செங்கோல் செலுத்திக் கொண்டிருந்தான். அவ்வரசன் தன்னுடைய அவைக்களத்துக்கு வரும் சிவனடியார்கள் சிலர் தேவாரத்திருப்பதிகங்களைப் பாடுதலைக் கேட்டுப் பேரின்பமடைவான். அத் தேவாரப்பாக்கள் அம் மன்னனுக்கு அளவு கடந்த மகிழ்ச்சியையும் இறைபக்தியையும் உண்டாக்கின. அவ்வரசன் தேவாரப்பாக்கள் எல்லாவற்றையுங் கேட்டு மகிழ வேண்டுமென்று எண்ணினான். தேவாரப் பாக்களின் பொருட்டு எல்லா விடங்களையுந் தேடிப்பார்த்தான்; எங்கும் அகப்படவில்லை. அதனால் மிகவும் மனம் வருந்தியிருந்தான்.

நம்பியாண்டார் நம்பியினுடைய சரித்திரமெல்லாம் அபய குலசேகர சோழ மன்னனுக்குத் தெரிந்தது. அவன் மிகுந்த வியப்படைந்தான். பொல்லாப்பிள்ளையாருக்குப் படைக்கும் பொருட்டுப் பலவகைப் பழங்கள், அவல், தேன், எள்ளுருண்டை முதலியவைகளெல்லாம் எடுத்துக் கொண்டு நால்வகைப் படையும் புடை சூழத் திருநாரையூரையடைந்தான். நம்பியாண்டாரைக் கண்டு வணங்கினான். தான் கொண்டு வந்துள்ளவைகளைப் பிள்ளையாருக்குப் படைக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். அவரும் அவைகளைத் தூய்மைப்படுத்திப் பிள்ளையாருக்குப் படைத்தருளினார்.

அரசன் நம்பியாண்டாரைப் பணிந்து, 'சமய குரவர்கள் பாடியருளிய தேவாரத் திருமுறைகளை முற்றிலும் கேட்டு மகிழ விரும்புகிறேன் அவைகள் உள்ள இடத்தைத் தாங்கள் விநாயகரிடத்துச் சொல்லியருளுதல் வேண்டு'மென்று வேண்டிக் கொண்டான்.

நம்பியாண்டார் பிள்ளையாரைத் தொழுது தேவாரத்திருமுறைகள் இருக்குமிடத்தைத் தெரியப்படுத்தியருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். பொல்லாப் பிள்ளையார், தமிழ் மறையாகிய தேவாரங்கள் திருத்தில்லைப் பதியிலே, பொன்னம்பலத்திற்குப் புறக்கடையிலே சமய குரவர்களுடைய கையடையாளங்களுள்ள அறையினுள் இருப்பதாக உணர்த்தியருளியதுடன், திருத்தொண்டர்களுடைய வரலாறுகளையும் நம்பியாண்டார் நம்பிக்கு நன்கு விளக்கியருளினார்.

நம்பியாண்டார் நம்பி, சோழ மன்னனிடம் தேவாரத் திருமுறைகள் இருக்குமிடத்தைக் கூறினார். சோழமன்னன் நம்பியாண்டார் நம்பியையும் அழைத்துக் கொண்டு தில்லையை அடைந்தான். சிவகங்கையிலே நீராடினான். சிவபூசை முதலிய நியமங்களை முடித்தான். பொன்னம்பலத்தை யடைந்தான். அம்பலவாணனைக் கண்டு உள்ளங் களித்தான். பலவகையாப் பாடியாடினான். அப்போது நம்பியாண்டார் நம்பி கூத்தப்பிரான் மீது கோயில் திருப்பண்ணியர் விருத்தம் பாடியருளினார்.

சோழமன்னன் பிறகு தில்லைவாழந்தணர்களைப் பார்த்துப், 'பொன்னம்பலத்திற்குப் புறக்கடையில் சமய குரவர்கள் கையடையாளமிடப்பட்ட அறையினுள், தேவாரத்திருமுறைகள் இருப்பதாகப் பொல்லாப்பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளியுள்ளார். அவைகளை எடுத்தல் வேண்டும்' என்றார்.

அதற்குத் தில்லைவாழந்தணர்கள், 'திருமுறைகளை வைத்தருளிய சமயக் குரவர்கள் எழுந்தருளி வந்தால் தான் அறைதிறக்கும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார்கள். சோழமன்னன் கர்ப்பக்கிரகத்துக்கும், சமயக் குரவர்களுக்கும் சிறப்பான பூசைகள் செய்து சமயக்குரவர்களை திரு வீதியிலே திருவுலா வரச்செய்து பின்னர்க் குறிப்பிட்ட அறைக்குமுன் கொண்டு வந்து நிறுத்திக் கொண்டு, "சமயக் குரவர்கள் எழுந்தருளி வந்து விட்டார்களே இனி அறை திறக்கலாமே" என்று கூறினான்.

தில்லை வாழந்தணர்கள் அரசனுடைய அறி வுக்கு வியந்து அறையைத் திறப்பதற்கு உடன் பட்டார்கள். அறையைத் திறந்து பார்க்கும்போது திருமுறைகளைப் புற்று மூடியிருந்தது. வெளியில் குடங்களையெடுத்து மண்ணைத் தள்ளிவிட்டுப் பார்க்கும்போது கணக்கற்ற ஏடுகள் அழிந்து போயிருந்தன. அதனால் அரசன் மிகவும் உள்ளம் வருந்தினான். செல்லுகள் நுழையும்படி எண்ணெயைச் சொரிந்தான். அப்போது, "தேவாரப் பதிகங் களிலே இக்காலத்துக்கு வேண்டியவைகளை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவைகளைப் புற்றுமூடச் செய்தோம்" என்று ஒரு அசரீரி வாக்கு உண்டா யிற்று. அதனைக் கேட்டு அரசன் முதலாயினோர் உளந் தெளிந்தனர்.

சோழ மன்னன் நம்பியாண்டார் நம்பியைப் பார்த்துத் "தேவாரம் முதலிய திருவருட்பாக்களை யெல்லாம் திருமுறைகளாக வகுத்தருளுதல் வேண் டும்" என்று வேண்டிக் கொண்டான். நம்பியாண்டா ரும் அதற்கு உடன்பட்டார். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாக வகுத்தார். திருநாவுக்கரசர் பதிகங்களை; நான்கு, ஐந்து, ஆறு என்னும் மூன்று திருமுறைகளாக வகுத்தார். சுந்தர மூர்த்திநாயனாருடைய பதிகங்களை ஏழாவது திருமுறையாக வகுத்தார். தேவாரப் பதிகங்களை ஏழு திருமுறையாக வகுத்தார். பின்னர்த் திரு வாதவூரடிகள் திருவாய் மலர்ந்தருளிய திரு வாசகம், திருக்கோவையார் என்னும் இரண்டையும் எட்டாந் திருமுறையாக வகுத்தார். திருமாளிகைத் தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், நம்பிகாடவ நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலிய முதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் ஒன்பது பேர்கள் திருவாய்மலர்ந்தருளியவைகளை ஒன்பதாந்திருமுறையாக வகுத்தார். திருமூல நாயனார் அருளிச் செய்த திருமந்திரத்தைப் பத்தாந்திருமுறையாக வகுத்தார். திருவாலவாயு டையார் திருமுகப்பாசுரம் முதலிய நாற்பது நூல்களைப் பதினோராந்திருமுறையாக வகுத்தார்.

பின்னர் நம்பியாண்டார் நம்பி ஆளுடைப் பிள்ளையார் உணர்த்தியருளியபடியே திருத்தொண்டத் தொகையை முதல்நூலாகக் கொண்டு, நாயன்மார்களுடைய வரலாறுகளைக் கலித்துறையந்தாதியாகப் பாடியருளினார். திரு ஞானசம்பந்தப் பெருமான் மீது, திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்னும் ஆறுநூல்களைப் பாடியருளினார். திருநாவுக்கரசு நாயனார் மீது திருவேகாதசமாலை பாடினார். தாம் பாடியருளிய பத்து நூல்களையும், சோழ மன்னனுடைய வேண்டு கோளின்படியே பதினொராந்திருமுறையிலே சேர்த்தருளினார். தில்லையிற்றானே தேவாரப் பதிகங்களுக்குப் பண்ணடைவும் வகுக்கப் பெற்றது.

சோழமன்னன் பின்னர்த் திருவடிப்பேறு அடைந்தான். நம்பியாண்டார் நம்பி திருநாரையூரை யடைந்தார். தேவாரத் திருமுறைகளும் திருத் தொண்டர் புராணமும் உலகிலே விளங்குவதற்கு முதற் காரணமாகவிருந்த நம்பியாண்டார் நம்பி நீண்ட காலம் பொல்லாப்பிள்ளையாருக்கு நல்ல பிள்ளையாக இருந்து இறுதியில் அப்பெருமானு டைய அடித்தாமரையை அடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறஞ் செய்ய விரும்பு

க. யோகேஸ்வரி



சந்தோசமாகப் வேலையிருந்து வந்த மான குமரன் தன் இரு பிள்ளைகளையும் தேடினான்.

அப்பா! எங்களுடைய வலைந்து வராமல் போகப் பார்க்கிறீர்களா? கேட்டுக் கொண்டே தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்த அகிலும், நிமலனும் வந்தார்கள்.

உங்களைத் தான் தேடிக் கொண்டிருந்தேன் என்று சொல்லிக் கொண்டே தன் கையிலிருந்த பையைத் திறந்து, இருவர் கையிலும் ஐந்து ரூபாய் நாணயத்தை வைத்து விட்டு உள்ளே சென்றான் குமரன்.

அறையில் சுவாமிப்படத்தின் முன் இரு உண்டியல்கள் இருந்தன. ஒன்றில் அகிலன் என்றும். இன்னொன்றில் நிமலன் என்றும் பெயர் எழுதியிருந்தது. இருவரும் ஓடிச் சென்று கடவுளை வணங்கி தம் கையிலிருந்த பணத்தை தமது பெயர் ஒட்டியிருந்த உண்டியல்களில் போட்டனர். பின்பு விளையாட ஓடி விட்டார்கள். குமரன் தன் பிள்ளைகளுக்கு சேமிப்புப் பழக்கத்தை கற்றுக் கொடுப்பதற்காக ஏற்படுத்திய வழக்கமே இது. தினந்தோறும் ஐந்து ரூபாய் நாணயத்தைக் கொடுத்து உண்டியல்களில் போடச் சொல்லி விடுவான். பிள்ளைகளும் பணத்தை எடுப்பதற்கு உண்டியல் எப்போது நிரம்பும் என்று பார்த்திருப்பார்கள்.

குமரன் பிள்ளைகளுக்கு நற்பழக்கத்தைச் சொல்லிக் கொடுப்பதில் குறியாக இருந்தான். பிள்ளைகள் வளர, வளர நற்பழக்கங்களும் வளர வேண்டும் என்பதே அவனது விருப்பம். தெய்வ நம்பிக்கை, பெரியோரை மதித்தல், ஏழைகளுக்கு உதவுதல், இரக்க மனப்பான்மை, மனிதாபிமானம், ஆகிய நற்குணங்கள் இன்று மறைந்து விடுகின்றன. மனித வாழ்வுக்கு அவசியமான இத்தகைய பண்புகளை இளமையிலேயே பிள்ளைகளுடைய இதயத்தில் பதிய வைக்க வேண்டும். அக் கொள்கையில் உறுதியுடன் இருந்தான் குமரன்.

அகிலனும், நிமலனும் நற் பிள்ளைகளாக வளர்ந்து வந்தார் கள். "கால் முகம் கழுவி விட்டு சுவாமி கும்பிட்டு விட்டு பாடங்களைப் படியுங்கோ" தாயார் சரஸ்வதி விளையாடி விட்டு வந்த பிள்ளைகளுக்கு கூறி விட்டு சமையல் கட்டினுள் நுழைந்தாள்.



"அம்மா எங்கட உண்டியல் கெதியில் நிரம்பி விடும். இந்த ஞாயிற்றுக்கிழமை அப்பா வீட்டில் நிற்கும்போது உடைக்கலாம். அப்பா நிற்பார் தானே?" ஆவலுடன் கேட்டான் அகிலன். நிறைஞ்ச பிறகு உடைக்கலாம். இப்ப கதையாமல் படியுங்கோ என்று சொன்ன சரஸ்வதி வேலையில் மூழ்கி விட்டாள். அகில்! உண்டியலை உடைச்ச பிறகு நீ காசை என்ன செய்யப் போகிறாய்? நிமலன் கேட்டான்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம் பயில்வோம்

# சிவப்பிரகாசம்

மட்டுவில் ஆ. நடராசா

முற்பிறவியிலே சரியை கிரியா யோகங்களாகிய தவங்களைச் செய்த காரணத்தால், ஆன்மாவுக்கு இருவினை ஒப்பும் சத்திநிபாதமும் பொருந்த, பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுத்து ஆன்மாவியல்பை உணர்த்துவர். அதனால் ஆன்மா கருவிகள் சடமெனவும் தான் அவற்றின் வேறான சித்துப் பொருளெனவும் அறிந்து கருவிகளால் மயங்காது அவற்றை விட்டு நீங்கி நிற்கும். அதன்பின் தத்துவங்களைச் சார்ந்து நின்ற ஆன்மா அவற்றை விட்டு நீங்கச் சிவபெருமான் திருவடிகளைச் சார்ந்து நிற்கும். இதைக் குறிப்பிடுவதற்காக முன்னர் சுட்டிய தவத்தினாலே இறைவன் உருவாய் வந்து கூட்டிடும் இவற்றை நீக்கிக் குரைகழல் கூடுமாறே என்றார்.

இதனால், சிவஞானமே குருவடிவாகி வந்து ஆன்மாக்களை ஆட்கொள்ளும் என்னும் ஞானமாண்மை கூறப்படுகிறது.

*பன்னிறம் கவரும் தொன்மைப் படிகநீ டொளியும் பன்மை*
*மன்னிவந் தியல்பும் தந்த வளரொளி போல வையம்*
*தன்னகம் பயிலும் நற்சிற் சடங்களின் தன்மை தாவா*
*நன்மையும் பெறநி றைந்த ஞானமே ஞான மென்பர்.* 69

இ-ள்: பல் நிறம் கவரும் தொன்மை படிக நீடு ஒளியும் - பல நிறங்களையும் கவருகின்ற பழைய பளிங்குக்கு மிகுந்த பிரகாசத்தையும், பன்மை மன்னி வந்த இயல்பும் தந்து அத் தன்மை தாவா வளர் ஒளி போல - பல நிறங்களோடும் பொருந்தி விளங்குகின்ற இயல்பைக் கூட்டி அவற்றின் இயல்பைத் தான் பொருந்தாத மிகுந்த பிரகாசத்தையுடைய சூரியனைப் போல, வையம் தன் அகம் பயிலும் நல் சித் சடங்களின் தன்மை தாவா - பூமியிடத்துப் பொருந்திக் காரியப்படும் நல்ல சித்தும் அசித்தும் ஆகிய இவற்றின் தன்மையைப் பொருந்தாது. நல் நலம் பெற நிறைந்த ஞானமே ஞானமென்பர் - ஆன்மாக்கள் சிறந்த முத்தியின்பத்தைப் பெறுமாறு எங்கும் நிறைந்து நிற்கும் சிவஞானமே உண்மை ஞானமென்று பெரியோர் கூறுவர் எ-று.

இச்செய்யுளில் இடம்பெறும் உவமான உவமேயங்கள்

| உவமானம் | உவமேயம் |
|---|---|
| சூரிய ஒளி | சிவஞானம் |
| பளிங்கு | ஆன்மா |
| நிறங்கள் | பாசம் |

பளிங்கு சூரியஒளியின் உபகாரத்தால் தான் சார்ந்த பொருள்களின் நிறங்களைத் தன்னியல்பாகக் காட்டி நிற்கும். அதுபோலவே ஆன்மா திருவருளின் உபகாரத்தால் தான் சார்ந்த கருவிகளின் இயல்பையே தன்னியல்பாகக் காட்டி நிற்கும்.

பளிங்கு தான் சார்ந்த பொருள்களை விட்டு நீங்கிச் சூரிய ஒளியைச் சேர்ந்தபோது தன்னொளி விளங்கி நிற்கும். அதுபோல, ஆன்மா தான் சார்ந்த பொருட்களை (தத்துவங்களை) விட்டு நீங்கி ஞானத்தைப் பெற்ற போது தற் சொரூபம் விளங்கப் பெறும்.

பளிங்கு பல நிறங்களைப் பொருந்தி நிற்பதற்கும் தன்னொளி விளங்கி நிற்பதற்கும் ஏதுவாகியிருப்பது சூரிய ஒளியேயாகும். அது போல ஆன்மா தத்துவங்களின் வண்ணமாய் நிற்பதற்கும் தற்சொரூபம் விளங்கப் பெறுவதற்கும் ஏதுவாயிருப்பது சிவஞானமேயாகும்.

[illegible]
[illegible] 356
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பளிங்கு சிறந்த ஒளியையும் பல நிறங்களையும் பெற்று விளங்கச் செய்யும் சூரிய ஒளி, பளிங்கின் தன்மையையோ வண்ணங்களின் தன்மையையோ பொருந்தாது. அதுபோல ஆன்மாவைக் கருவிகளின் வண்ணமாய் நிற்கவும் தன்னியல்பு விளங்கி நிற்கவும் செய்யுஞ் சிவஞானம், தத்துவங்களின் தன்மையையோ ஆன்மாவின் தன்மையையோ தான் பொருந்தாது வேறாய்ப் பிரகாசமாய் நிற்கும். இச் சிவஞானத்தையே அறிஞர்கள் "ஞானம்" என்று சொல்லாற் குறிப்பிடுவர்.

ஒருவர் அடையக் கூடிய நன்மைகளை எல்லாவற்றிலுஞ் சிறந்த நன்மை முத்தியின்பமே யாதலால், அதை "நன்மை" என்றார்.

***மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை***
***ஆயவா றுயிரின் மேவும் மருளினில் இருளாய் நிற்கும்***
***மாயைமா மாயை மாயா வருமிரு வினையின் வாய்மை***
***ஆயவா றுயிரின் மேவும் அருளினில் ஒளியாய் நிற்கும். 70***

இ-ள்: இரு வினையின் - நல்வினை தீவினைகளால் வரும் புண்ணிய பாவங்கள் காரணமாக, மாயா வரும் மாயை மாமாயை எனப்படும் ஆய ஆருயிரின் - ஒழியாது வருகின்ற சுத்த அசுத்த மாயா தத்துவங்களின் வண்ணமாய் நிற்கும் அரிய உயிரிடத்திலே, மேவும் மருளினில் - பொருந்திய மயக்கத்தினால், இருளாய் நிற்கும் - அந்த ஞானம் அறியப் படாததாய் மறைந்து நிற்கும், மாயை மாமாயை மாயா வரும் இருவினையின் வாய்மை ஆய - சுத்த மாயை அசுத்த மாயை ஒழியாது வரும் புண்ணிய பாவங்கள் ஆகிய இவற்றின் உண்மையை நுணுகி அறிய, ஆருயிரின் மேவும் அருளினில் - அரிய உயிரிடத்திற் பொருந்திய அருள் நிலையில், ஒளியாய் நிற்கும் - அந்த ஞானம் பிரகாசமாய் நிற்கும் எ-று.

"ஞானம்" என்பது முந்திய செய்யுளிலிருந்து வருவிக்கப்பட்டது.

மாயை கன்மங்களைக் கூடி நின்று போகங்களை அனுபவிக்கும் ஆன்மா, அவற்றின் இயல்பையும் தன்னியல்பையும் சிவத்தின் இயல்பையும் அறியமாட்டாது. அதற்குக் காரணம் ஆணவமலம் அதன் அறிவை மறைத்தலேயாகும். ஆணவமல மறைப்பினால் சிவஞானம் ஆன்மாவுக்குத் தோன்றாது தெரியாமைக் குறிப்பிடுவதற்கே "மருளினில் இருளாய் நிற்கும்" என்றார். மருள் - ஆணவ மல மறைப்பினால் ஏற்படும் அஞ்ஞானம். பொருள் இருளால் மறைக்கப்பட்டிருத்தல் காரணமாக, அறியப்படாது மறைந்து நிற்றலாகிய காரியம் தோன்றும். இச் செய்யுளில் இருளாகிய காரணம், அறியமுடியாது மறைந்து நிற்றலாகிய காரியமாக உபசாரமாகக் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலால் இருளாய் நிற்கும் என்பதற்கு "அறியப்படாததாய் மறைந்து நிற்கும்" எனப் பொருள் கொள்ளப்படும்.

கன்மம் தோன்றியும் அழிந்தும் அழியாது பெருக்குப் போலத் தொடர்ந்து வருதலை 'மாயா வருமிருவினை என்றார்' எனக் கூறினார். நல்வினை, தீவினை என்னும் இருவினைகளாலும் அவற்றால் வரும் புண்ணிய பாவங்களாலும் இன்ப துன்பங்களிலும் இயல்பை ஆராய்ந்தறிய, அவை பொன் விலங்கும் இரும்பு விலங்கும் போல ஆன்மாவைப் பந்தப்படுத்துவன; சாத்துவ முடையவை என்னும் எண்ணம் அறிவின் கண்ணே தோன்றுதலாகிய இருவினையொப்பு உண்டாகும்.

இவ்வாறு இருவினையொப்பும் மலபரிபாகமும் பொருந்திய ஆன்மாவுக்கு, சத்திநிபாதம் உண்டாகும். இதையே "ஆருயிரின் மேவும் அருள்" என்றார்.

சத்தி - திருவருட் சத்தி. நிபாதம் - பதிதல்.

இச் சத்திநிபாதர்களுக்கு ஞானம் விளங்கித் தோன்றும் என்பதைக் குறிப்பிடுவதற்காக "அருளினில் ஒளியாய் நிற்கும்" என்றார்.

***தேசுறு மலருந் ஆன்ம தெரிசனம் ஆன்ம சுத்தி***
***ஆசிலா ஆன்ம லாபம் ஆகமுன் றாகும் மூன்றும்***
***பாசம தகல ஞானம் பற்றலேதான் பணியை நீத்தல்***
***ஈசனே பந்த முத்தல் எனும்வழி நடக்கு மன்றே. 71***

*The unlearned are inferior to the learned, before whom they stand begging, as the destitute before the wealthy. 395*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ-ள்: தேசு உற மருவும் ஆன்ம தெரிசனம் ஆன்ம சுத்தி ஆக இவை ஆன்ம லாபம் ஆக மூன்றாகும். - ஆன்மா ஞானத்தை அடைதலினால் வரும் பயன் ஒளியோடு பொருந்திய ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி குற்றமற்ற ஆன்மலாபம் என மூன்றாகும். மூன்றாம் - அந்த மூன்றும், பாசம் அது அகல ஞானம் பற்றல் - பாச நீங்கப் பர ஞானத்தைத் தரிசித்தல், தான் பணியை நீத்தல் - அந்த ஞானத்தோடு கூடித் தன் செயலை விடுத்தல், மூலம் தொந்த அழுந்தல் குற்றமற்று நேயத்தழுந்தல், மூன்றும் இறைபணி அடங்கும் - என்று சொல்லப்படும் இறைபணி அடங்கும் எ-று.

பாசம் விட்டு நீங்கப் பரஞானத்தைத் தரிசித்தல் ஆன்மதெரிசனம் எனவும் ஞானத்தைக் கூடித் தன் செயலை விடுத்தல் ஆன்ம சுத்தியெனவும் ஞானத்தாலே சிவத்தை அடைந்து அதில் அழுந்துதல் ஆன்ம லாபம் எனவுஞ் சொல்லப்படும். தான் பணியை நீத்தல் என்பதற்கு இச்சா ஞானக்கிரியைகளை விடுத்தல் எனப் பொருள் கூறுவாருமுண்டு.

*மிகுதி அடுத்த இதழில் தொடரும் ......*


---

*15ம் பக்கத் தொடர்ச்சி*

நிமலா! எனக்கு நல்ல ஒரு 'கிரிக்கட் பற்' வாங்க விருப்பம். அதுதான் எப்ப உண்டியல் உடைக்கலாம் என்று பார்த்துக் கொண்டு இருக்கிறேன். அகிலன் தனது மனதில் இருந்த ஆசையை வெளிப்படையாகக் கூறினான்.

நிமலா நீ என்ன செய்யப் போகிறாய்? தன்னைப் போலவே நிமலனும் சொல்லப் போகிறான் என்று அகிலன் எண்ணினான்.

அகிலா! உனக்குத் தெரியுமா? வன்னியிலை நடந்த சண்டையிலை கன பிள்ளைகளுக்கு தாய், தகப்பன் இறந்து போனார்களாம். சில பிள்ளைகளுக்கு தகப்பன் இல்லையாம். சிலருக்கு தாய் இல்லையாம். அப்ப அந்தப் பிள்ளைகள் எங்கை இருக்கினம்? குழப்பமடைந்த அகிலன் குறிக்கிட்டுக் கேட்டான்.



அந்தப் பிள்ளைகள் அனாதைகளாக ஆச்சிரமங்களில் இருக்கினம். பக்கத்து வீட்டு மாமாவும், அப்பாவும் கதைக்கக் கேட்டனான். நிமலன் சொன்னான்.

அந்தப் பிள்ளைகளோடை பார்க்கேக்கை நாங்கள் அதிஷ்ட சாலிகள். எங்களுக்கு விருப்பமான பொருள் எல்லாம் கிடைக்குது. அவர்கள் அனாதைகள் என்றால் பாவங்கள் தானே! அகிலன் உண்மையான அக்கறையுடன் சொன்னான்.

ஒன்டு செய்வம் நிமலா எங்கட உண்டியல் காசை அவையளுக்கு கொடுப்பம். அவை விரும்பியதை வாங்கட்டும்.

நானும் அப்படித்தான் யோசித்தேன் ரெண்டு பேற்ற காசையும் சேர்த்து குடுப்பம் அந்தப் பிள்ளைகள் சந்தோஷப்படுவினம் நிமலன் மகிழ்வோடு கூறினான்.

சரி எங்கட முடிவை அம்மாவுக்கு சொல்லுவம் என்று இருவரும் தாயை நோக்கி ஓடினார்கள்.

தன் செல்வங்கள் இருவரும் ஒரு மனமாகச் சொன்ன வார்த்தையைக் கேட்ட பெற்ற மனம் பூரித்தது.

"அறஞ் செய்ய விரும்பு" என்று ஒளவைப்பாட்டி சொன்னதை தம் பிள்ளைகள் பின்பற்றுவதையிட்டு பெற்றோர் மனமகிழ்ந்தார்கள்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. ***

மணலில் தோண்டிய அளவில் தோண்டிய ஊற்றுநீர் ஊறும். அதுபோல் மக்களுக்குக் கற்ற அளவுக்கே அறிவு ஊறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்

செல்வமாவது இரத்தினம், பொன், வெள்ளி, நெல் முதலியன. தருமத்துக்கும் இன்பத்துக்கும் காரணம் செல்வம். இதுபற்றியன்றே மாணிக்கவாசக சுவாமிகள் "முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியும்" என்றும், "வறியா ரிருமை யறியார்" என்றும் திருக்கோவையாரில் அருளிச் செய்தார்.

அழியாப் பொருளாகிய கல்வியையும் பல்வித, தேர்ச்சிக்கு உரிய புத்தகங்களையும் கொள்ளுதற்கும், பசி முதற் பிணிகளினால் வருந்தாது கவலையற்றிருந்து கல்வி கற்றற்கும், கற்ற கல்வியை அழகு செய்து தமக்கும் பிறர்க்கும் பயன் படுத்தற்கும் உதவி செல்வமே. கல்வி யுடையவரும் வறியவராயின், பசி நோயினாலும் தீராக் கவலையினாலும் வருந்தி, தாம் முன் கற்ற கல்வியையும் மறந்துவிடுவர். வறியவர் மெய்ந்நூற் பொருளைத் தெளிய அறிந்து போதித்தாராயினும், "நாம் இவர் சொல்லை விரும்பிக் கேட்போமாயின் பணங்கொடுப்பதினால் இவர் வறுமையை முடித்தல் வேண்டுமே" என்று பயந்து, யாவருங் கேளா தொழிவர். ஆதலின் இவர் வாய்ச்சொல் பயனில் சொல்லாய் முடியும்.

செல்வ மில்லாதவர், வறுமையுண்ட போழ்தினான் மாத்திரமா, அத்துன்ப மொழியச் செல்வர் வீடு வாயிலை நோக்கிச் செல்லுதற் றுன்பமும், அவரைக் காணுதற்றுன்பமும், கண்டவுடன் அவர் மறுத்தபோது உண்டாகுந் துன்பமும், மறாது விடத்தும் அவர் கொடுத்ததை வாங்குதற் றுன்பமும், அதனைக் கொண்டு வந்து போசனத்துக்கு வேண்டுவனவைகளைக் கூட்டுதற் றுன்பமும் முதலிய பல துன்பங்களாலும் நாடோறும் வருந்துவர்.

எல்லா நன்மையு முடையராயினும் பொருளில்லாதவரை அவரைப் பெற்ற தாய், தந்தை, மனைவி, மைத்துனர், முதலாயினாரும் அவமதிப்பர். ஒரு நன்மையும் இல்லாதவராயினும் பொருளுடையவரை அவர் பகைவரும் நன்கு மதிப்பர். வறியவரிடத்தே தாம் கொள்வதில்லாமையன்றிக் கொடுப்பதுண்டாதலும் உடைமையால், அது நோக்கிச் சுற்றத்தார் யாவருங் கைவிடுவர்.

கல்வியும், தருமமும், இன்பமும், கீர்த்தியும், மனிதருள்ளே பெருமையும், உறவும், நினைத்தது முடித்தலும் வெற்றியுமாகிய எல்லாம் செல்வமுடையவர்க்கே உண்டு. செல்வ மில்லாதவர் உலகத்திலே நடைபிணமாவர். ஆதலினால், யாவரும் செல்வத்தை இடையறா முயற்சியோடு வருந்திச் சம்பாதித்தல் வேண்டும்.

பொருள் சம்பாதிக்கு நெறிகளாகளாவன: வித்தை கற்பித்தல், உயிர்க்கு உறுதி பயக்கும் நூல்களையும் உரைகளையுஞ் செய்து வெளிப்படுத்தல், வேளாண்மை, வாணிகம், இராச சேவை, சிற்பம் முதலியவைகளாம். ஞானநூலை வேதனத்தின் பொருட்டுக் கற்பிக்கலாகாது; கற்பித்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்.

பொருள் சம்பாதிக்குமிடத்து, தருமநெறியாலே சம்பாதித்தல் வேண்டும். தருமநெறியால் வந்த பொருளே மேற்சொல்லிய பயன்கள் எல்லாவற்றையுங் கொடுக்கும். களவு, பொய்ச்சான்று சொல்லல், பொய் வழக்குப் பேசல், பொய்ப்பத்திரம் பிறப்பித்தல், விசுவாசகாதம், பரிதானம் வாங்கல், சுங்கங்கொடாமை முதலிய பாவநெறிகளாலே பொருள் சம்பாதிக்கலாகாது. பாவநெறியால் வந்த பொருள் முன் செய்த புண்ணியத்தையுங் கெடுத்து, இம்மையிலே தீராத வசையையும், சந்ததி நாசத்தையும், இராச தண்டத்தையும், மறுமையிலே நரகத் துன்பத்தையும், பிறவித் துன்பத்தையும் விளைவிக்கும்.

நாடோறும் சம்பாதிக்கப்படும் பொருளை நான்கு பாகமாகப் பகுத்து, அவைகளுள், இரண்டு பாகத்தைத் தமது அநுபவத்துக்கு ஆக்கி, ஒரு

*Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug; and knowledge will flow from a man in proportion to his learning.* 396

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகத்தை ஆபத்தின் பொருட்டுச் சேர்த்து, எஞ்சி நின்ற ஒரு பாகத்தைச் செலவிட்டுத் தருமஞ் செய்தல் வேண்டும். ஆபத்தின் பொருட்டுச் சேர்க்காது செலவிட்டவர் பின்பு வியாதியினாலேனுங் கிழப்பருவத்தினாலேனும் பொருள் சம்பாதிக்குந் திறமை இல்லாதபொழுது, பெண்டிர் பிள்ளைகளோடு வருத்தமடைவர். அக்காலத்தில் பெண்டிர் பிள்ளைகளும் அவரை உபசரியாது கைவிடுவர்.

முதலிற் செலவு சுருங்கினால், பொருள் ஒரு காலத்தும் நீங்காது. முதலிற் செலவு சுருங்கக் கூடாதாயின், முதலும் [illegible] செலவழித்தல் வேண்டும். எவனுக்கு முதலிற் செலவு மிகுமோ, அவன் வாழ்க்கை உள்ளது போலத் தோன்றி மெய்ம்மையால் இல்லையாகிப் பின்பு அத்தோற்றமும் இல்லையாய்க் கெட்டுவிடும். வரவு செலவுக் கணக்கெல்லாம் அப்பொழுது அப்பொழுது சிறிதுந் தவறாமல் எழுதிக் கொள்ளல் வேண்டும். கணக்கெழுதாமல் யாதொன்றுஞ் செய்யலாகாது. மாசந்தோறும் வரவு செலவு இருப்புக் கணக்குப் பார்வையிட்டு முடித்தல் வேண்டும்.

சம்பாதிக்கப்பட்ட பொருளிலே, ஆபத்தின் பொருட்டும் தருமத்தின் பொருட்டும் செலவிட்டொழிய, எஞ்சி நின்றதைக் கொண்டு, தக்க பிரயோசனத்தைத் தருதற்குரிய விளைநிலம் தோட்டம் முதலியவைகளை வாங்கல் வேண்டும். அல்லது முதற் பொருளுக்கும் வட்டிக்குங் குறைவுபடாத ஈட்டையும் தகுதியாகிய சான்றினையுமுடைய பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு, வட்டிக்குக் கொடுத்தல் வேண்டும். கடனுடையவன் தம்மிடத்து வைத்த அசைக்கப்படு பொருளாகிய ஈட்டை, அவனுக்குக் கொடுக்குமளவும், கேடுதியும், அழிவும் விகாரமும் பயனின்மையும் உருமாற்றமும் அடையாமற் காத்தல் வேண்டும். அந்த ஈட்டைத்தாம் அநுபவித்தால் வட்டியில்லை. அநியாய வட்டியும், வட்டிக்கு வட்டியும் வாங்குதல் பெருங் கொடும் பாவம். பிராமணன் ஒரு காலத்திலும் வட்டி வாங்குதல் கூடாது. ஆபத்துக் காலத்தில் மாத்திரம் வாங்கலாம்.

தந்தை வழியாக வேனும், தாய் வழியாக வேனும், தாயினுடைய தந்தை முதலானவர்களின் வழியாக வேனும் வந்த பொருள் தாயம் எனப்படும். வித்தை கற்பித்தல், வேளாண்மை, வாணிகம், சிற்பம், சேவை முதலிய தொழில்களாலும் யாசனத்தாலும் அடையப்பட்ட பொருள் உடைமை எனப்படும். இவ்வுடைமைப் பொருளைத் தாமிச்சைப்படி தானம் முதலியவைகளாகச் செலவிடலாம். பெண்களின் பொருட்டுத் தந்தை முதலானவர்களாலே கொடுக்கப்பட்ட பொருள் சீதனம் எனப்படும். சீதனப் பொருளைக் கணவனேனும் தந்தையேனும் உடன்பிறந்தோரேனும் கொள்ளுதற்கும் கொடுத்தற்கும் உரியரல்லர்.

இத்தேசங்களிலே, பலவகைத் தொழில்கள் செய்து சீவனஞ் செய்யச் சத்தியுடையவர்களுள், அநேகர் ஒன்றுஞ் செய்யாது சோம்பேறிகளாய் இருந்து கொண்டு, அநேகர் நாணமின்றிப் பலவீதிகளுஞ் சென்று யாசித்தும், அநேகர் தாயப் பொருளையே கொண்டும், அநேகர் தம் மனைவியருடைய சீதனப்பொருளையே கொண்டும், அநேகர் தாவர சங்கமங்களாகிய தாயத்தையும் சீதனத்தையும் ஈடு வைத்தும், விக்கிரயஞ் செய்தும் சீவனஞ் செய்கின்றார்கள். தாவரம் - அசைக்கப்படாத பொருள்; சங்கமம் - அசைக்கப்படு பொருள். அறிவும் ஆண்மையும் மானமும் உடையவர்கள் இப்படிச் செய்வார்களோ, செய்யார்கள். கூழேயாயினும் தமது தொழில் முயற்சியாலே கிடைத்தது அமிர்தமே யாகும்; பருப்பு நெய், பாயசம் வடை தயிர் முதலியவைகளோடு கூடிய அன்னமேயாயினும், யாசனத்தினாலாவது, பிறருடைய தொழில் முயற்சியினாலாவது, கிடைத்ததாயின் அது விஷமேயாகும். தொழில் முயற்சிகள் சுவதேசத்திலே பலிக்காவிடின், இதர தேசங்களினாயினும் சென்று, தாமே வருந்திச் சம்பாதித்துச் சீவனஞ் செய்தலே அறிவும் ஆண்மையும் மானமும் உடையவருக்கு அழகு. இத்தேசங்களில் அநேகர் பணம் வைத்துக் கொண்டும், யாசித்துச் சீவனஞ் செய்கின்றார்கள். இவர்களுக்குப் பிச்சை கொடுப்பவர்கள், உண்மையை ஆராய்ந்தார்களாயின், தங்களைப் பார்க்கிலும் அவர்களே செல்வமுடையவர்கள் என்று அறிவார்கள். இவர்கள் நாட்டு வேடர் எனப்படுவார்கள். பொருள் வைத்துக் கொண்டு யாசித்துப் புசித்தவர்கள் நரகத் துன்பத்தை அநுபவித்து, மறுபிறப்பிலே மாடாகப் பிறந்து, அன்னம் போட்டவருக்கு உழைப்பார்கள்.

[illegible]

# ஈரம் ஒரு மென் மதுரப்பதம்

முருகவேல் பரமநாதன்

ஈரம், வாரம், அன்பு, நேசம், பாசம் காதல் என்பன ஒத்த பொருள் உள்ள சொற்கள். நிகண்டு அகராதி, ஒரு பொருட் பலசொல், பலபொருள் ஒரு சொல் பற்றிய விளக்கம் தருவன. உரையாசிரியர்கள் இலக்கண இலக்கியங்கள், சாத்திரங்கள் புராணங்களுக்கு விளக்க உரை தந்துள்ளனர். பௌராணிகர்களும் பொருள் விரிக்கும் வல்லமையும் உண்டு. இப்போ தமிழில் கலைக் களஞ்சியங்கள் வந்துள்ளன. தமிழறிவு, ஆற்றலுக்குச் சொல்லாட்சி வேண்டும். தமிழிலே இசை, தெளிவு, இனிமை நிறைய உண்டு. சம காலத்தில் இதை தமிழையே எல்லோரும் விரும்புவர். எனினும் பழைய நூலறிவு மிக முக்கியம். இலக்கணம் தமிழைப் பிழையின்றி எழுத உதவியாய் இருக்கும். அன்பு என்னும் பொருள் தரும் ஈரம் என்ற சொல் மனிதனோடும், பக்தியோடும் முல் ஆண்டவனோடும் நெருங்கிய தொடர்புடையது. இந்த ஈரம் பறவைகள், மிருகங்கள் போன்ற பிராணிகள் இடமும் நிறைய உண்டு பசுவைக் கன்றும், தாயும் சேயும், சிட்டுக் குருவியும் குஞ்சும், காகமும் காக்கைக் குஞ்சும், குரங்கும் குட்டியும் இருந்து இசைக்கியமாக விளங்கக் காணலாம். மன்று இனம் அன்போடு இணைந்தது. மனிதனைச் சமூகப் பிராணி, சமுதாய விலங்கு, ஆறறிவு விலங்கு என விஞ்ஞானம் வர்ணிக்கிறது. இந்த மனிதம் ஓரறிவு குறைந்தால் மா - விலங்கு என்ற நிலைக்குத் திரும்பி விடுகிறது என்று சான்றோர் கூறுவர். இந்த விஞ்ஞான யுகத்திலே மனித நேயம் பற்றிப் பெரிதும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. மரண கலாசாரமும், வன்முறை நாகரிகமும், உயிர் மலிந்து விட்ட நிலையில் உலகெங்கும் காணப்படுகிறது. இதற்கெல்லாம் அன்பு வற்றிக் கொண்டு போவதும் முக்கிய காரணம் எனலாம். இந்த ஈரம் என்ற சொல் ஒரு மென் மதுரபாதம் எனச் சேக்கிழார் பேசுகின்றார்.

இளையான்குடி மாறநாயனார் நிறைந்த பக்திமான். அருளாளர். இவரைச் "சுந்தரர்" இளையான் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்" எனப் போற்றுகிறார். சிவனடியார்களுக்கு உணவு கொடுத்து பரிபாலித்தவர்களில் இவரும் ஒருவர். இவருடைய சிறப்பைக் கவித்துவத்தைத் தெய்வச் சேக்கிழார் பாடும் திறம் இது.

**ஆரம் என்பு புனைந்த ஐயர்தம் அன்பர் என்பதோர் தன்மையால்**
**நேர வந்தவர் யாவராயினும் நித்தமாகிய பத்திமுன்**
**கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்(து)**
**ஈரம் மென்மதுரப் பதம்பரி வெய்த முன்னுரை செய்தபின்"**

*இளையான் குடிமாற நாயனார் புராணம் 3*

இளையான் குடி மாறநாயனார் இறைவனது அடியார்கள் என்ற தன்மையால் புதிதாக வந்தவர்கள் முன்பின் தெரியாதவர்கள் (நேர வந்தவர்) எவராயிருந்தாலும் தெருவிலே எதிர்கொண்டு கைகுவித்து, வணங்கி நின்று எப்படி அழைத்து வந்தார்? என்பதற்கு விடையாக "செவிப்புலத்து ஈரம் மென் மதுரப்பதம் பரி வெய்த முன்னுரை செய்தபின்" என்று கூறுகிறது பாடல் அமைப்பு. எனவே அவர்கள் முன் பின் பழக்கமில்லாதவர்கள் ஆனாலும் மாலையாக எலும்பை அணிந்த சிவ பெருமானின் அடியவர்கள் என்ற அடிப்படையில் பரிவோடு அவர்களுடைய செவிகள் குளிரக் கனிவாகப் பேசி அவர்களை அழைத்து வந்து

*How is it that any one can remain without learning, even until his death, when to the learned man every country is his own (country), and every town his own (town). 397*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபசாரம் செய்தார் என்று அவன் இப்பாடல் சொல்லுகிறது. அவரது தண்ணளியான பேச்சை "ஈரம் மென்மதுரப் பதம் பரி வெய்த" என்று சேக்கிழார் விளக்குகிறார் பெரியபுராண ஆசிரியர். இதன் பொருள் என்ன. ஈரம் - அன்பு, மென் - மென்மையான, மெதுமையான, மதுரம் - இனிமை. தித்திப்பு, பதம் - சொல், வார்த்தை. எனவே அன்பு குழைந்த மென்மையான இனிய சொற்களால் அவர்களை மகிழ்வித்துச் செய்தார் என்றுதான் பொருள் கொள்ளலாம். விருந்தினரை அகமும் முகமும் மலர மகிழ்ச்சியோடு வரவேற்க வேண்டும் என்றுதான் வள்ளுவர் இலக்கணம் கூறுகின்றார்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

திருக்குறள் - 90

(அனிச்சம் ஒரு - மணந்தால் வாடும், விருந்தினரை முகம் வேறுபட நோக்கினால் வாடுவர்)

இதற்குப் பரிமேலழகர் - சேய்மைக்கண் கண்டுழி இன்முகமும், அது பற்றி நண்ணிய வழி இன்சொல்லும், அது பற்றி உடன்பட்ட வழி நன்றாற்றலுமென விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகமும் இவ்வழிச் செய்யாமைக் கண்ணே வாடி நீங்குதலின், தீண்டிய வழியல்லது வாடாத அனிச்சப்பூவினும் விருந்தினர் மெல்லியர் என்பதாம் என விளக்கம் தந்துள்ளார்.

இன்சொல் என்பதன் என்ன என்பதற்கு வரைவிலக்கணம் தருவது போல வள்ளுவர் ஒரு குறள் தந்துள்ளார்.

"இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்"

திருக்குறள் 91

இன்சொல் - இன்சொற்களாவன, ஈரம் அளைஇ படிறிலவாம் செம்பொருள் கண்டார் வாய்ச்சொல் - இன்போடு கலந்து வஞ்சனை இலவாய் இருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாயிற் சொற்கள் இப்பாடலிலும் ஈரம் - அன்பு என்ற பொருளையே தருகின்றது.

படிறு - வஞ்சனை, ஈரம் - அன்பு, செம்பொருள் - அறம். தர்மம், கண்டார் - தெரிந்தவர்கள் எனவே அன்புடைமையை வெளிப்படுத்தும் சொல் இன்சொல் இந்த ஈரம் கலந்த சொல்லே சிறப்பானது என்பதை நாலடியாரும் எடுத்து ஆண்டிருக்கிறது.

"கனைகடல் தண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியில் கரும்பு தின்றற்றே - நுனிநீக்கித்
தூரில் தின்றன்ன தகைத்தன்றோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு"

நாலடியார் 38

மதுரம் என்ற சொற் பிரயோகம் இனிமையைத், தித்திப்பைக் குறிக்கிறது. மனம், நா, செவி மதுரிக்கும் சம்பவங்கள் மனிதருக்கு நிறைய வரும். மென் மதுரவாக்கால் விரும்பும் சுகர் கடின வல் மதுரவாக்கால் மகிழாதே என ஔவை உலகினர்க்கு எடுத்து உணர்த்தியுள்ளார். ஈரம் என்ற பதம் அவள் நாவிலும் தவழ்கிறது. ஈரமிலா நெஞ்சத்தார்க்கீந்த உபகாரம் நீரிலெழுத்துக்கு நேர் என்பது ஔவை வாக்கு. இறைவனை வந்திப்பார் மதுரக்கனியே என்பே ற்றுகிறார் வாதவூரடிகள். திருவாசகம் அந்த மணிவாசகரை "இருப்பிடம் அன்பின் பெருங்குணமாம் பிள்ளை"யென அடையாளம் காட்டினார் பட்டினத்தார். [illegible] கள் அன்பு. மிக்க அன்பு. அற்றல் மிகு அன்பு என்றெல்லாம் பாடியுள்ளார். இடையறா அன்பையே இறைவனிடம் வேண்டினார்.

"நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப் பெரிதும் விரைகின்றேன்
ஆடகச் சீர்மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் உடையானே"

திருச்சதகம் 21

தொடர்பு அறாத, இடைவிடு இல்லாத அன்பு இடையறா அன்பு. இவ்வன்பு விடாதுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே என இறைவனைக் கேட்பவரும் அவரே. நீரை ஒரு பாத்திரத்தில் இருப்பு வைப்பதற்கும், வெள்ளத்தை

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊற்றுவதற்கும் தொடர்ந்து ஓடுவதிலே வித்தியாசம் உண்டு. இதைச் சலதாரை, தைலதாரை என்பர். ஆற்றொழுக்குப் போல் அன்பு தொடர்வதையே இடையறா அன்பு என்பர். மெய்யன்பு, பொய்யன்பு என்றும் இருவகை உண்டு. பொய்யன்பு கைத்தொடு தொடர்பு பாதியில் அறுந்துவிடுவது. மெய்யன்பு உண்மையானது. இந்த அன்பையே சிவமென்று சொல்லுவர் திருமூலர்.

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாருமறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

*திருமந்திரம் 257*

அன்பாகிய திருவருளும் இன்பமாகிய சிவமும் மணியும் ஒளியும் போல ஒன்றே. அன்பாகிய திருவருளே இன்பமாகிய சிவனுக்குத் திருமேனியாகும். இவ்வழியிலே அன்பே சிவம் இந்த உண்மையினை அருளால் அனைவரும் அறிந்தபின் தாம் இடையறாது திருவடியிலே வைக்கும் அன்பாகிய விதையே சிவமாய் விளைந்து இன்பமாய்க் கனிந்து அந்த அன்புடையார்க்கு என்றும் குறையாத பேரின்ப அனுபவமாகும். பிரிவிலா அன்பர் நின் அருட் பெய்க்கழலிணைக் கீழ் மறுவிலாச் செல்வம் வந்து பெற்றார் என மணிவாசகர் கூறுவதும் இதனையே. காரைக்காலம்மையார் "இறவாத இன்ப அன்பு வேண்டிப் பெற்றார். இவ்வன்பு பின்னிக் கிடக்கும் பான்மையை அடுத்த பாடலிலே கூறுகின்றார் திருமூலர்.

"பொன்னைக் கடந்திலங்கும் புலித்தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்புதானே"

*திருமந்திரம் 258*

பொன்னையும் வென்று விளங்கும் புலித்தோலை ஆடையாக உடையவன். மின்னொளியாய் விளங்கும் அழகியதாகிய இளம் பிறையைச் சூடியவன். அப்பிறை அழகுறப் பொருந்தி சிவனைச் சேர்ந்திருப்பதால் தேவர் முதலிய பதினெண் கணங்களாலும் போற்றி வணங்கப் படுவதாயிற்று. சிவன் வெண்ணீறு அணிபவன். பவளமால் வரையின் நிலவெறிப்பது போற் பரந்த நீற்றழகு பச்சடம்பில் திவள" எனப் பாடுகிறார் கடவுள் மாமுனிவர். இதனாலே பொடியாடி என்று அழைக்கப்படும் சிவன் இடத்து என்னுடைய அளவிலாப் பேரன்பு - பிரிவின்றிக் கலப்பாகப் பின்னிக் கிடந்தது. என்பது இப்பாட்டின் கருத்தாகும். பின்னிக் கிடந்தது - சேர்ந்திருந்தது.

இறைவனை அடைய விருப்பம் இருக்க வேண்டும். ஈரம் உடையவராய் அமைய வேண்டும். இந்த ஆர்வமும், ஈரமும் உள்ளவர் இறைவனைக் கண்டு திருவடிகளைச் சேர்வர் அன்பிலோர் பிறப்பிறப்பை அனுபவித்துத் துன்பமே காண்பர்.

"ஆர்வம் உடையவர்காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பர் இணையடி
பாரம் உடையவர் காண்பர் பவந்தனைக்
கோர நெருக்கொடு கொங்கு புக்காரே."

கோரம் - துன்பம், கொங்கு - ஒருவித நரகம்

சேக்கிழார் திருக்கூட்டச் சிறப்பைப் பாடும் போது அவர்கள் பெருமை என்னாற் பேசமுடியாதது என்கிறார்.

"ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணி அல தொன்றிலர்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலர்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?

ஈரம் - இரக்கம், அன்பு - ஈர அன்பு - கனிந்த அன்பு, பாரம் - பொறுப்பு கடமை

சைவசித்தம் என்ன சைவ சித்தாந்தம் என்ன- ஈரம் அன்பு - சிவம் இவற்றோடு தொடர்புடைய பக்தி அன்பு வாழ்வு என்ன சமுதாய அன்பினால் இயங்குவது. இயங்குவிப்பது என்ன என்ற சிந்தனையின் அடிப்படையிற் சைவத் திருமுறைகள் காட்டும் அன்பின் முடிபு அவன் திருவடியென்பதை யார் பேதமற்ற அன்பே சிவம் அந்த அன்பே ஈரம் அது ஒரு மென் மதுர வாக்கு வார்த்தை என்பதையும் மனதிற் கொண்டு மானசீகமாக இவ்வாறு உண்மை வாழ்வு சைவமாய் அமையட்டும்.

The learning which a man has acquired in one birth will yield him pleasure during seven births. 398.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானசம்பந்தர் வடமொழியையும் தென்தமிழையும் சமமாக நேசித்தார்

**சிவ. சண்முகவடிவேல்**

அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்
செந்தமிழ்க் கீதமுஞ் சீரினால் வளர்தரப்
பந்தணை மெல்விர லாளொடும் பயில்விடம்
மந்தம்வந் துலவுசீர் மாமழ பாடியே.

என்பது திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய அருந்தமிழ் மூன்றாம் திருமுறையில் தோன்றுவது. திருமழபாடிப் பெருமான் மேல் சிந்தனைக் கருவில் உருவானது.

திருமழபாடியில் இளந்தென்றல் காற்றுச் சென்றுலவும் அத்தலத்தில் பந்து போன்ற மிருதுவான விரல்களையுடைய அழகாம்பிகையுடன் வச்சிரத்தம்பேசுவரர் எழுந்தருளியிருப்பார். அங்கு செந்தண்மை பூண்டு ஒழுகும் அந்தணர் யாகம் புரிவார்கள். வேத மந்திரங்களின் பெரு ஒலியும் செந்தமிழில் கீதங்களை இசைப்பதனால் வரும் ஓசையும் சீரோடு வளர்ந்த வண்ணமாக உள்ளது என்பது அத்தேவாரப் பொருள் எனலாம்.

அந்தணர் வேள்வி சீரினால் வளர்தர, அருமறைத் துழனி சீரினால் வளர்தர, செந்தமிழ்க்கீதம் சீரினால் வளர்தர மாதர்ப் பிறைக் கண்ணியானும் மலையான் மகளும் மழபாடியில் மகிழ்ந்து உறைவார்கள். இறைவன் இறைவி சந்நிதானத்தில் வேள்வியும் வேதமும் செந்தமிழும் ஏற்றத் தாழ்வு இன்றிப் போற்றப்படும் திறன் இறும்பூதெய்துவிப்பது.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப் பூதபரம் பரை பொலிய. சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர் புனிதவாய் மலர்ந்தழுதார் என அருள்மொழித் தேவருடைய திருவாக்கையும் அத்தேவாரப்பொருள் மெய்ப்பிக்கின்றது.

"அந்தணர் குடிமுதல்வ ராசின்மறை கைப் படுத்த சீலத்துக் கவுணியர் கோத்திரம் விளங்கச் செப்புநெறி வழிவந்தார் சிவபாத விருதயர். அவர் தம் பெருந் தவத்தால் பெற்று எடுத்த அரும் புதல்வர் அம்மை அமுதுண்ட பிள்ளையார்.

தொல்லைமறை விதிசொற்ற மறைப்பேர் செய்யத் தேடுபொருள் தாங்கியவர் புகலிப் பிள்ளையார் வருதிருத்தின் மறைநான்குந் தந்தோ ரென்று மந்திரங்கள் பொழிந்தவர்க்கு, மறு வைக்காத பெருங்கிரமம் ஓதுதலை புவி வந்த புண்ணியனார் வவ்விளுந்து புனித வேதம்.

"அருமறை மந்திரமே தழைப் பாக்கு மாவை தொல்லையை எடுத்து இயம்புவார்"

மந்திரங்க ளனைவுமே மருளிச் செய்து மற்றவற்றின் வைதிகமாம் சடங்கின் வந்த சிந்தைமயக் குறுமையந் தெளிய வெல்லாஞ் செழுமறையோர்க் கருளியவர் - திருஞானசம்பந்தர்.

"கலைமறையோர் கவுணியனார் தம்மை...... இறைஞ்சித் தாமுன் வல்லமறை கேட்டையந் தீர்ந்து வாழ்ந்தார்"

என்று எல்லாம் எடுக்கும் மாக்கதை கவுணிய குல காதலனை ஏத்துகின்றது.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மறையவர் குலத்தில் பிறந்தவர். வேதங்களை நன்கு உணர்ந்தவர். தாம் பாடியருளிய பதிகங்கள் தோறும் இறுதிப் பாசுரத்தில் பல சந்தர்ப்பங்களில் அந்தணர் குலத்தையும் அருமறையையும் தம்மோடு இணைத்துப் பாடியுள்ளார். அவற்றுள் ஒருசில இவை:

"நாறும் பூம் பொழில் நண்ணிய காழியுள், நான்மறை வல்ல ஞானசம்பந்தன் என்றும், "புகலிப் பதியமா மறையொடு சம்பந்தன் என்றும் அந்தணர் காழி அருமறை ஞானசம் பந்தன் என்றும், வேதத்தொலி யானும்மிகு வேணுபுரந் தன்னைப் பாதத்தினின் மனம் வைத்தெழு பந்தன் என்றும், பூசுரன் ஞானசம் பந்தன் என்றும் காழி கவுணியன் ஞானசம் பந்தன் என்றும், மறைஞானசம்

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தன் என்றும் அந்தணர் வழியுள் அணி ஞானசம்பந்தன் என்றும், நல்ல கேள்வி ஞான சம்பந்தன் என்றும், சந்தம் பரவு ஞான சம்பந்தன் என்றும் முத்தமிழ் நான்மறை நாவி வற்றமிழ் ஞானசம் பந்தன் என்றும், அங்கநீண்ட மறைகள் வல்ல அணிகொள்சம் பந்தன் என்றும், திருமா மறைஞான சம்பந் தன் என்றும் அருமறை ஞான சம்பந்தன் என்றும் இவை போல இன்னும் பல சொற்றொடர்கள் தம்மால் அழைக்கின்றார். அவை திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் நால்வேதத்தி லும் வல்லவர் என்பதையும் நாள்தோறும் வேதத்தை நாவினால் நவின்று ஏத்துபவர் என்பதை யும் ஐயத்துக்கிடமின்றி எடுத்து இயம்பா நிற்பன.

சிவபிரானைத் தோத்திரிக்க வேதத்தைப் போற்றியது போலத் தாம் அருளிச் செய்த தேவாரத் தமிழையும் போற்றினார், பேணினார், அன்பு பாராட்டினார் என்பதற்கு அவர் பாடிய திருக்கடைக் காப்புக்களில் காணப்படும் அடையாளங்களில் சில இவை:

"ஞானசம் பந்தன் உரைசெய்த திருநெறி யதமிழ் என்றும், "ஞானசம் பந்தன் தமிழ் என்றும் தமிழ்ஞானசம் பந்தன் ஆய்ந்ததமிழ் என்றும் ஞானத்துயர் சம்பந்தன் நலங்கொள் தமிழ் என்றும், புகலித்தமிழ் ஞானமிகு பந்தன் குன்றாத் தமிழ் என்றும், தமிழ் விரகன் என்றும் ஞானமிகு சம்பந் தன் தமிழ் மாலை என்றும் பந்தனுரை செந்தமிழ் கள் என்றும் இவை போல்வன பிறவாற்றாலும் வேதத்தை நன்குணர்ந்த ஞான சம்பந்தர் தமிழ் மாலையைப் போற்றும் திறன் போற்றற்குரியது.

இன்னும், செந்தமிழ் பரப்புறு திருப்புகலி என் பதனாலும் "ஆரியத்தொடு செந்தமிழ்ப் பயனறிகிலா அந்தகர்க் கெளியேனலேன்" என்று தேவாரத்திலும் சுட்டப்படுவதால் பத்தி இலக்கியத்திலும் செந் தமிழ்ப் போற்றப்பட்டதனையும் செந்தமிழ்ப் பயன் அறிந்தவர் ஞான சம்பந்தர் என்பது நன்கு பெற் றாம்.

"...கழுமலப்பதியின் நறையிலங்கு வயற்காழித் தமிழ்ஞான சம்பந்தன்", மறையிலங்கு தமிழ் வல் லார்" எனக் கூறுமாற்றால் வேதப்பொருள் தாங்கி விளங்குவன ஞானசம்பந்தருடைய செந்தமிழ் மாலை. அதனால் நான்மறை நாவலன் முற்றமிழ்க் கின்துணை ஞானசம்பந்தன் என்று நயம்பட நவில்வார்.

ஞான சம்பந்தர் நான்மறை நாவலனாக நடமாடினாலும் "ஞான சம்பந்தன் தமிழ்வல்லவ ரடிபேணுத லுமயே" எனப் பாடியருளுகின்றார். வேதம் சொல்லும் ஞான சம்பந்தருடைய அழுகலை அல்ல, ஞான சம்பந்தருடைய தமிழ் வல்லவரு டைய பாதங்களைத் தொழுதல் தவமாகும் என் பார். வேதத்தை விடத் தமிழ்ச் சிறப்பு மேலானது என்பது மாறும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தருடைய உள்ளக் கிடக்கையாகும்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் வேதம் சொல்லுவதனால் அடையும் பேற்றை யாண்டும் உணர்த்த முன் வரவில்லை. ஆனால் தமிழ் வேதத்தைத் தாம் பாடிய தமிழ் வேதத்தைப் படிப்பதனாலும் பண்ணோடு பாடக் கேட்பதனாலும் பெறும் பேற்றைப் பதிகம் தோறும் திருக்கடைக் காப்பில் செப்பத் தவறியதில்லை. அவற்றுள் ஒரு சில வருமாறு:

"திருநெறி யதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே..." "ஞானசம் பந்தன் தமிழ்மாலை பற்றியென் றும்மிசை பாடிய மாந்தர் பரமன் அடி சேர்ந்து குற்றமின் றிக்குறை பாடொழி யப்புக ழோங்கிப் பொலிவாரே..." நான்மறை ஞானசம் பந்தன் சொன்ன பல்லியல் பாடல்வல் லார் களிந்தப் பாரொடு விண்பரி பாலகரே "ஞானசம் பந்தன் சொன்ன இன்புடையப் பாடல்கள் பத்தும் வல்லார் இமையவ ரேத்தவி ருப்பார்தாமே" காழிந்நகர்க் கலைஞானசம் பந்தன்தமிழ் பத்தும் யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம் ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடை வாரே" "ஞானசம் பந்தன் நவின்றஇவ் வாய்மொழி நலமிகு பத்தும் பண்ணியர் பாகப் பத்திமை யாலே பாடியு மாடியும் பயிலவல் லோர்கள் விண்ணவர் விமானங் கொடுவர ஏறி வியனுலக காண்டுவீற் றிருப்பவர் தாமே" வயற்காழி நாதன் வேதியன் ஞான சம்பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை ஆசுரிக் திசை கற்றுவல்லார் சொலக் கேட்டுகந் தவர் தம்மை வாழி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்வந் தடையாகவே.

நடுநிலை சாயாத ஞானசம்பந்தருடைய நாமொழியே ஆரிய வேதத்திலும் தமிழ் வேதத்தி னுடைய தனிச் சிறப்பை உணர்த்துமாற்றை உய்த்து உணரலாம்.

The learned will long the more learning when they see that while it gives pleasure to themselves, the world also derives pleasure from it. 399

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழின் தொடர்ச்சி....

# சைவபூஷணம்
# தமிழ் விளக்கம்

22. பரமகாருண்யராயும் உத்தமராயும் விளங்கும் ஸ்ரீ மகாதேவரானவர் சிவதீக்ஷா சம்பன்னராயுள்ள சற்சைவருக்கு சாலோக பதவியைக்கொடுக்கிற சரியாபாதம், சாமீப பதவியைக்கொடுக்கும் கிரியா பாதம், சாரூபப்பதவியைக்கொடுக்கின்ற யோகபாதம், சாயுஜ்ய முத்தியைக் கொடுக்கின்ற ஞான பாதம் என்னும் நான்கு பாதங்களையும் அறிவிக்கும் நிமித்தமாகவும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களும் சித்திக்கும் பொருட்டும், அனைவரையும் காக்கும் பொருட்டும் ஏழுவித சிவதீக்ஷை, கர்ஷணாதிப்பிரதிஷ்டாந்தம், பிரதிஷ்டாதி, உத்ஸவாந்தம், உத்ஸவாதி, பிராயச்சித்தாந்தம் ஆகிய இந்தக்கிரியைகள் நடைபெறும்பொருட்டும், காமிக முதலான இருபத்தெட்டுத் திவ்யாகமங்களையும் அநுஷ்டுப்பு சுலோகங்களாகத் திருவுள்ளம் பற்றியருளினார்.

அந்த பக்ஷசாரர் யாரெனில், பிராமணர் முதலான நான்கு வருணத்தாரும் அந்த நால்வரிடத்திலிருந்து அநுலோமக்கிரமமாக உற்பத்தியான (அஃதாவது பிராமணப் புருஷருக்கு க்ஷத்திரியர் முதலிய மூவகைப் பெண்களிடத்தும் க்ஷத்திரியனுக்கு ஏனையிருவரிடத்தும் வைசிகனுக்குச் சூத்திரப் பெண்ணிடத்தும் உற்பத்தியான) அநுலோமர் ஆகியோரின் மரபினராம். இவர் இந்த ஆகமங்களைப் படிப்பதற்கு அதிகாரிகளாவார் என்க.

23. சிவதீக்ஷையினாலே சிரேஷ்டனாகயிருப்பினும், அத்தகைய சைவன், தன்னுடைய சாதிக்கு ஒத்ததாயும் அந்தந்ததேசத்துக்கு ஏற்றதாயும் அவ்வவ்வாசாரங்களுடனே சம்பந்தமுற்றிருப்பதுமுள்ள நல்ல சமயாசாரத்தை அநுஷ்டிப்பானாயின். அவனே அந்த வைதிக சைவனென்றறிக.

24. வாக்கியங்களின் தாரதம்மியமானது பௌஷ்கராகமத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அஃது எவ்வாறெனில், உலகத்திலே பாமரரானவருடைய வசனத்தினும் ஆப்தராயுள்ளார் வசனம் சிரேஷ்டம். அதனினும் இந்திரனுடைய வசனம் சிரேஷ்டம். அதனினும் பிரமாவின் வசனமும், அதனினும் விஷ்ணுவின் வசனமும் அதனினும் ருத்திரன் வசனமும், அதனினும் மகேசுவரனுடைய வசனமும், அதனினும் சதாசிவனுடைய வசனமும் சிரேஷ்டமென்று இவ்வாறு வசனதாரதம்மிய முறைகூறப் பெற்றிருக்கின்றதென்க.

25. சிவாகம வல்லவரான சைவாசிரியர்கள் சிஷ்யர்களுக்கு விசேஷதீக்ஷாசமயத்திலும், ஞான தீக்ஷாசமயத்திலும், உபதேசிக்கப்படும் விஷயங்கள், ஐந்தென்றும், ஆறு, ஏழு, எட்டு என்றும், பன்னிரெண்டென்றும் சொல்லப்படும். அவையெவையெனில், கோத்திரம், சந்தானம், கோசரம், மடம், விருக்ஷம் ஆக ஐந்தும். ஆகமம் சேர்த்து ஆறும், நாமதேயம் சேர்த்து ஏழும், மந்திரம் சேர்த்து எட்டுமாம் அவற்றுள் கோத்திரமாவது சைவகோத்திரம். சந்தானமாவது நந்திகேசுவரர் சந்தானம்; கோசரமாவது சிவன் என்னும் பொருள்; மடமாவது ஆமர்த்த மடம்; விருக்ஷமாவது வடவிருக்ஷம்; ஆகமமாவது காமிக முதலிய இருபத்தெட்டாகமங்கள்; நாமதேயமாவது சிவநாம தேயம்; மந்திரமாவது பஞ்சாக்கரம்; இவ்வாறு முன்னைய எட்டும் அறிக. பின்னைய பன்னிரண்டாவது, கோத்திரம், நாமதேயம், சந்தானம், மடம், விருக்ஷம், வனம், குகை, வாசம், கோசரம், மந்திரம், தரிசனம், முகம் என்பனவாம். இவ்வாறு சூட்சும ஆகமத்தில் விரிவாகச் சொல்லப் பட்டிருக்கின்றதென்க. இந்தப் பரம்பரை வருமாறு: ஸ்ரீமகாதேவர் எழுந்தருளியிருக்கும் கைலாய மலையின் பக்கத்தில் அநேக மடங்களும் அநேக குகைகளும் அநேக திவ்ய விருக்ஷங்களும் உண்டு. அவற்றுள், ஆமர்த்தகமடம் ஒன்று. அதற்கு ஆசிரியர், சனற்குமாரபகவான். அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருக்ஷம் கடம்பம். பின்னர் புஷ்பகிரிமடம் ஒன்று. அதற்கு ஆசிரியர் சனகமகாமுனிவர். அதற்கு விருக்ஷம் அர்ச்சுனம். பின்னர் கோளகிமடம் ஒன்று. அதற்கு ஆசிரியர் சனாதன முனிவர். அதற்கு விருக்ஷம் அரசு. பின்னர் ஆமண்டமடம் ஒன்று. அதற்கு ஆசிரியர் சனந்தன முனிவர். அதற்கு விருக்ஷம் வடம். (ஆல்) இந்நான்கும் சைவமடமாகும். இவ்வாறு இந்த நான்கு மடங்களும் காமிகாமத்திலே சொல்லப்பட்டிருக்கின்றன. (25, 26, 27, 28)

*(காலோத்தராகமத்தில்)*

சிவகுலம், சிதாகுலம், சோதிகுலம், சாவித்திரிகுலம் என்குலம் நான்கு எனப்படும். அவற்றுள் சிவகுலம் சிவனிடமிருந்து உண்டானது. சிதாகுலம் சத்தியினிடமிருந்து உண்டானது. சோதிகுலம் விந்துவினிடமிருந்து உண்டானது. சாவித்திரிகுலம் நாதத்தினிடமிருந்து உண்டானது. தீக்ஷாகாலத்தில் சிவன் முதலிய பொருள்களிடத்தில் மந்திரம் லயம் அடையும் கிரமத்தில் நான்கு குலமும் உண்டாயின. பிராமணர் முதலிய நான்கு சாதிகளிடத்தும் முறையே இந்த நான்கு குலமும் அறியப்படும். சத்தகுலம் உண்டாகும் பொழுது பசுபாசகுலம் முதலிய நீங்குகின்றன என்பது காலோத்தர ஆகமம்.

ஆமண்டமடம், மயூரவிருக்ஷம், அம்சாக்ஷி, விந்துசரசு, கிருதமால விருக்ஷக்காடு, பஞ்சாக்ஷர மந்திரம், பர்வதம், காயத்திரி கோத்திரம், அத்திரிமகாரிஷி, நந்திகேசரர் சந்தானம், சிவகோசரம் ஊர்த்துவமுகம், காலோத்தர ஆகமம், என்பது வைரவோற்பவம் என்னும் உபாகமம். (25, 26, 27, 28)

29. பரமேசுர வாக்கிய சமூகமான சிவாகமங்களை ஓதுவித்தலிலும், ஆத்மார்த்தமான கிரியைகள் செய்வதிலும், பிராமணர் முதலிய நான்குவருணத்தவருக்கும் அந்தந்த வருணங்களுக்கு அனுகுணமாக சிவாகமங்களிலே கூறப்பட்ட அந்தந்த மந்திரங்களினாலே தீக்ஷை செய்வித்தலாகிய பரார்த்தக் கிரியையிலும், சிவப் பிராமணர்களுக்கு ஆசிரியத்தன்மை உண்டென்று சிவாகமங்களில் கூறப்படுகின்றன.

30. சிவப்பிராமணராகிய ஆதிசைவருக்கு சிவாகமமுறைப் படி தீக்ஷை முதலியன செய்து வைப்பதற்கு ஆசிரியத்துவம் உண்டென்று சகல மூலாகமங்களிலும் உபாகமங்களிலும் கூறப்பட்டிருக்கின்றன. ஆதிசைவராகிய சிவப்பிராமணர் இல்லாத இடத்தில் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய இவருக்கு தீக்ஷை முதலியன செய்து வைப்பதில் அதிகாரம் உண்டென்று சிந்தியாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது. அவ்வாகமவாக்கியமாவது. (இதன் பொருள்) பிராமணரில்லாத தேசத்தில் க்ஷத்திரியன் குருவாவான். க்ஷத்திரியன் இல்லாத இடத்தில் வைசியன் குருவாவான். வைசியனில்லாத இடத்தில் சூத்திரன் குருவாவான் என்க.

31. சிவப்பிராமணர்களாகிய ஆதிசைவர்கள் இருக்குமிடத்தில் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய இவர்கள் தத்தம் வருணத்திலுள்ளார்க்கு அறியாமையினாலே தீக்ஷை முதலியன செய்து வைப்பின், செய்தவரும் செய்யப் பெற்றவரும் ஆகிய இருவரும், யமலோகத்தை அடைந்து, அங்கு நிகழும் விசாரணை முடிவில் இரௌரவம் முதலிய நரகங்களை அடைவரென்றறிக.

32. பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு வருணத்தவர்களும், சைவதீக்ஷையிலும், நித்தியமாகிய ஆத்மார்த்த பூசையிலும், நைமித்திகமாகிய தனக்கு உசிதமான சிவலிங்கப் பிரதிஷ்டையிலும், காமியமாகிய சோமவார விரத உத்தியாபனம், மந்திரசித்தி முதலியவற்றிலும், தாம் செய்து கொள்வதற்கு பிறர்க்குச் செய்து வைப்பதற்கும் அதிகாரமுடையவராவர். ஆயினும் அந்தந்தச்சாதியிலே உள்ள ஆசிரியர் அந்தந்தச்சாதியிலேயுள்ள சிஷ்யருக்குச் செய்து வைப்பது முறைமையென்று சுப்ரபேதாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. பிராமணர் முதலான நான்கு வருணத்தவருக்கும் தடையின்றி ஆசிரியத்துவம் உண்டென்றும், இன்னொரு பக்ஷமாக அநுலோமரான அறுவருக்கும் ஆசிரியத்துவ முண்டென்றும் இவ்வாறு சிந்திய விசுவம் என்னும் ஆகமத்திற் சொல்லியிருக்கின்றது. அன்றியும், சிவதேசாசாரத்தினால் பிரதிலோமரான அறுவருக்கும் சுத்தம் சாதியிலுள்ளவரைக் குறித்து மந்திரமில்லாமல் ஆசிரியத்துவமுண்டென்றும் அவ்வாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது. அநுலோமர் அறுவர் யாரெனில், பிராமணருக்கு க்ஷத்திரியப் பெண்ணினிடத்திற் பிறந்த சவர்ணன் என்று ஒருவன் செட்டிப் பெண்ணினிடத்திற் பிறந்த நாவிதன் என்றொருவன். சூத்திரப் பெண்ணினிடத்தில் பிறந்த பாரசைவன் என்றொருவன். ஆகப் பிராமணனுக்குப் பிறந்த பிள்ளைகள் மூன்று. க்ஷத்திரியனுக்குச் செட்டிப் பெண்ணினிடத்தில் பிறந்த மத்தருமென்றொருவன், சூத்திரப் பெண்ணிடத்திற் பிறந்த உக்கிரன் என்றொருவன். ஆக க்ஷத்திரியனுக்குப் பிறந்த பிள்ளைகள் இரண்டு, செட்டிக்குச் சூத்திரப் பெண்ணிடத்திற் பிறந்த அழுவன் என்றொருவன் ஆக அநுலோமருவருவென்று கொள்க. ஆதலால், பிராமணனுக்கு நான்கு வருணத்திலும் விவாகம் செய்யலாமென்றும், மற்றவர்களுக்கும் அவ்வாறே தன் சாதியிலும் தனக்கு கீழ்ப்பட்ட சாதியிலும் விவாகம் செய்து கொள்ளலாம் என்றும் அறிக.

34. விவாகம் எட்டுவிதம் ஆகும். அவை வருமாறு: பிராமம், தைவம், பிராசாபத்தியம், ஆரிஷம், ஆசுரம், காந்தருவம், பைசாசம், இராக்கதம் என்பனவாம். அவற்றுள், பிரமமாவது நல்லகோத்திரத்திற் பிறந்த அழகுள்ள ஒருவனை அழைத்து சந்து அவனையும் தன்னுடைய புத்திரியையும் நன்றாக அலங்கரித்து புத்திரியை அவனுக்குக் கொடுத்தல். தைவ விவாகமாவது, சிஷ்யனுக்கு தன் புத்திரியைக் கொடுத்தல். பிராசாபத்திய விவாகமாவது, சிஷ்யரல்லாதவருக்கு தர்மங்காரணமாக தன் புத்திரியைக் கொடுத்தல். ஆரிஷ விவாகமாவது, இரண்டு பசுக்களை வாங்கிக் கொண்டு தன் புத்திரியைக் கொடுத்தல். ஆசுர விவாகமாவது அனேக திரவியங்களை வாங்கிக் கொண்டு தன் புத்திரியைக் கொடுத்தல். காந்தருவ விவாகமாவது, நாயகன், நாயகிகள் இருவரும் தாமே கூடிக் கலத்தல். பைசாச விவாகமாவது, நித்திரை செய்கின்ற பெண்ணை அவளறியா வண்ணம் கொண்டு போதல். இராக்கத விவாகமாவது அழும்படியாக பலாத்காரமாகக் கொண்டு போதல். இவ்வாறு எட்டுவித விவாகங்களும் அறிந்து கொள்க.

35. வித்து ஒன்றாயினும் நிலத்தின் வன்மை, மென்மைகளால் பயன் வேறுபடுதல் போலவும், மேகஜலம் ஒன்றாயினும் பூமியின் வேறுபாட்டால் ரச வேறுபாட்டை படைதல் போலவும், தீக்ஷை, மந்திரம், உபதேசம் முதலியன பெற்றுக் கொள்ளுபவர்களின் பக்குவ வேறுபாட்டால் பலன்களில் தாரதம்மியத்தை அடைகின்றன.

---

**காலை மாலை கடவுள் வணக்கம்**

நாளந்தி கோறின்று கண்கழீஇத் தெய்வத்தைத்
தானறிய மாற்றாற் றொழுதெழுக அல்கந்தி
நின்று தொழுதல் பழி.

*(பொ.உரை)* சிறு காலைப்பின்கண் ஒரு கோலாலே பல்லுவைத்துக் கண்கழுவித் தான் வணங்குந் தெய்வத்தைத் தானறியும் நெறியாலே தொழுக. மாலைப் பொழுதின் கண் தான் வணங்குந் தெய்வத்தை நின்று தொழுதல் குற்றமாம், இருந்து தொழுக.

*ஆசாரக்கோவை*

**தவிர்க்க வேண்டுவன**

தலைபுரைத்த எண்ணெயா லெவ்வுறுப்புந் தீண்டார்
பிறருடுத்த மாசுணியுந் தீண்டார் செருப்புக்
குறைபெனினுங் கொள்ளா ரிரந்து.

*(பொ.உரை)* தலைக்கண் தேய்த்த எண்ணெயால் யாதோர் உறுப்புந் தீண்டார். பிறர் உடுத்த அழுக்காடையும் தீண்டார். பிறர் தொட்ட செருப்பும், பிறர் இரந்து தமக்குக் காரியமென்று வேண்டிக் கொள்ளினும் கொள்ளார்.

*ஆசாரக்கோவை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

## [illegible]

| சுபானு ஆடி | | | |
|---|---|---|---|
| 01 | 17-07-2003 | வியாழக்கிழமை | ஆடிப்பிறப்பு, தக்ஷிணாயன புண்ணியகாலம், சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 06 | 22-07-2003 | செவ்வாய்க்கிழமை | ஆடிச்செவ்வாய் |
| 07 | 23-07-2003 | புதன்கிழமை | கார்த்திகை விரதம் |
| 08 | 24-07-2003 | வியாழக்கிழமை | மூர்த்தியர் குருபூசை, புகழ்ச்சோழர் குருபூசை |
| 10 | 26-07-2003 | சனிக்கிழமை | சனிப் பிரதோஷ விரதம் |
| 11 | 27-07-2003 | ஞாயிற்றுக்கிழமை | கூற்றுவர் குருபூசை |
| 12 | 28-07-2003 | திங்கட்கிழமை | ஆடி அமாவாசை விரதம் |
| 13 | 29-07-2003 | செவ்வாய்க்கிழமை | ஆடிச்செவ்வாய் |
| 16 | 01-08-2003 | வெள்ளிக்கிழமை | நாகசதுர்த்தி விரதம், ஆடிப்பூரம் |
| 18 | 03-08-2003 | ஞாயிற்றுக்கிழமை | ஷஷ்டி விரதம் |
| 19 | 04-08-2003 | திங்கட்கிழமை | பெருமிழலைக் குறும்பர் குருபூசை |
| 20 | 05 08 2003 | செவ்வாய்க்கிழமை | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, சேரமான் பெருமாள் குருபூசை, ஆடிச்செவ்வாய் |
| 22 | 07-08-2003 | வியாழக்கிழமை | கலியர் குருபூசை, கோட்புலியர் குருபூசை |
| 23 | 08-03-2003 | வெள்ளிக்கிழமை | வரலக்ஷ்மி விரதம் |
| 24 | 09-08-2003 | சனிக்கிழமை | சனிப்பிரதோஷ விரதம் |
| 26 | 11-08-2003 | திங்கட்கிழமை | பூரணை விரதம் |
| 27 | 12-08-2003 | செவ்வாய்க்கிழமை | ஆடிச்செவ்வாய் |
| 30 | 15-08-2003 | வெள்ளிக்கிழமை | சங்கடஹர சதுர்த்தி விரதம் |

கடந்த ஜனவரி மாதம் சைவநீதி நடத்திய சைவசமயச் சிறுகதைப் போட்டிக்குக் கிடைத்த சிறுகதைகள் போட்டி நிபந்தனைக்கு ஏற்றவாறு அமையவில்லை. கிடைக்கப்பெற்ற சிறுகதைகள் பரிசுக்குத் தகுதி அற்றன என்ற நடுவர்களின் தீர்ப்பை அறியத்தருகிறோம்.

ஆசிரியர் குழு


## சைவநீதி மாத இதழ்

### பெறுமதி விபரம்

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில்
ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

*C. Navaneethakumar*
No30,Ramya Road, Colombo-04,
Sri Lanka.
T'Phone No: 380458



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# புத்தக விற்பனை


மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## திருவாசகம்

### வெளிவந்துள்ளது.

நீண்டகாலப் பாவனைக்கு ஏற்றவண்ணம் பிளாஸ்டிக் கவருடன் கூடிய திருவாசகம் விற்பனைக்கு உண்டு. பிரதி ஒன்றின் விலை ரூபா 150/- மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்குக் கழிவு உண்டு.

* விதியை வெல்வது எப்படி?
* திருவருட்பயன் - மூலமும் உரையும்

ஆகிய நூல்களும் விற்பனைக்கு உண்டு.

*கிடைக்கும் இடம்:*

சைவநீதி

195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக்குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச்சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங்கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்துவிளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

## கலையரசி

**23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13. தொ.பே: 478885**


**சந்தா நேயர் கவனத்திற்கு**

* உரிய காலத்தில் சந்தாவைப் புதிப்பித்துக்கொள்ளவும்.
* முகவரி மாற்றம் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.
* இதழ்கள் ஒழுங்காகக் கிடைக்காவிடின் எம்முடன் தொடர்புகொள்ளவும். கிடைக்காத இதழ்களை அனுப்பிவைப்போம்.


Regd. No. QD/48/News 2003 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு 12-06-2003 இல் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org